

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமිළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 222 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை (01.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 10, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## பிரதான கட்சிகளின் மே தினக் கூட்டங்கள்



02 பக்கம்

# அரச நிறுவனங்களால் ரூ.1029 பில்லியன் நட்டம்!

## 2022ஆம் ஆண்டின் நிலைமைகளை விபரிக்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய



**நமது விசேட செய்தியாளர்**

அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தும் அரச நிறுவனங்களால் கடந்த 2022ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 900 கோடி ரூபா (ரூ.1029 பில்லியன்) இழப்பு ஏற்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த நட்டமானது, கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு அரசாங்கம் செலவிடும் தொகைக்கு இணையானதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய, நட்டத்தில் இயங்கும் இவ்வாறான அரச நிறுவனங்களை மறுசீரமைக்க சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனை அவசியமில்லை. 02 பக்கம்

# தொழிலாளர் தினம் இன்று



இடம்:- புறக்கோட்டை
படப்பிடிப்பு:- சமன் அபேசிறிவர்தன

02 பக்கம்

# ஜனாதிபதி வேட்பாளர் பற்றி பேச வேண்டாம்

## மொட்டு அமைச்சர்களுக்கு வாய்ப்பூட்டு

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பகிரங்கமாக எதனையும் அறிவிக்கவேண்டாம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்பீடம் கட்சியின் அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடத்துக்கு மேல் உள்ள நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுன அமைச்சர்கள் கருத்து வெளியிடுவது சிக்கலாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

# நாட்டின் வெற்றிப் பாதைக்கு பங்களிக்கும் உழைப்பாளிகள்

## மே தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி பெருமிதம்



உழைக்கும் மக்களே, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயல்முறையிலும் வலுவான செல்வாக்கை செலுத்தக்கூடிய சமூக சக்தியாக உள்ளனர். வரலாறு நெடுகிலும் நாம் எதிர்கொண்ட, வெற்றிகொண்ட சவால்கள் ஏராளம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை வெற்றிப் பாதைக்கு... 02 பக்கம்

# சவால்களை ஏற்றுக்கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

## மே தின வாழ்த்துச் செய்தியில் சஜித் அழைப்பு



பிரிவினைவாதம், இனவாதம், பயங்கரவாதம் இல்லாத உன்னத நாடாக எமது நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொள்ளும் ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே என்பதோடு, இதன் நம்பகமான வேலைத்திட்டத்துடன் ஒரு வலுவான முகாமை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம் என தேசத்தின் சகல உழைக்கும்... 02 பக்கம்

# அமைச்சின் செயலாளர்களுக்கு புள்ளி வழங்கும் செயன்முறை

## 50க்கு கீழ் எடுப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை



**த. யுவராஜ்**

அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்களினது செயல்திறனின் முன்னேற்றத்தை ஆய்வுசெய்து காலாண்டுக்கு ஒருமுறை மாற்றங்களைச் செய்யும் நோக்கத்துடன் அவர்களுக்கு புள்ளி வழங்கும் முறைமையொன்றை அடுத்த மாதம் முதல் அறிமுகப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

# தெற்கில் தீவிரமாகும் எலிக்காய்ச்சல்

## 19 பேர் உயிரிழப்பு



**•நா.தினுஷா**

தென் மாகாணத்தில் எலிக்காய்ச்சல் கடுமையான தொற்றுநோயாக பரவி வருவதாகவும் காலி மாவட்டத்தில் மாத்திரம் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் எலிக் காய்ச்சலால் 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் காலி மாவட்ட சமூக வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அசுத்தமான நீர், ஈரமான மண் அல்லது சேற்றில் தொழில் செய்பவர்களுக்கு இந்த நோய் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். 02 பக்கம்

# அமைச்சரவை மாற்றத்தை ஒத்திவைத்தார் ஜனாதிபதி

## ஏமாற்றத்தில் பெரமுன உறுப்பினர்கள்

தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அது காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் இந்த முடிவால், பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்கள் பெரும் ஏமாற்றத்தில் இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமென கடந்த காலங்களில் பல்வேறு தகவல்கள் பரவின. இதனால், பொதுஜன பெரமுன உறுப்பினர்களும் இது தொடர்பில் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தனர். 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



இன்று தொழிலாளர் தினம் அல்ல.. தொழிலாளர் என்று ஒரு வர்க்கம் இருக்கிறதென்று அரசியல்வாதியளுக்கு நினைவு வாற நாள்... என்னங்கோ..!

# 13 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு



**•நா.தினுஷா**

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் 13 மாவட்டங்களில் இன்று (01) காலையில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த மாவட்டங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும், சில பிரதேசங்களில் 75 மில்லி மீற்றர் வரையில் மழைவீழ்ச்சி பதிவாகலாம் என்றும எதிர்வு கூறப்பட்டுள்ளது. 02 பக்கம்

# விசேட பொலிஸ் பாதுகாப்பு அமுல்



**•நா.தினுஷா**

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மே தினக் கூட்டங்களும் பேரணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், கொழும்பு, நுகேகொடை, கண்டி உள்ளிட்ட பிரதேசங்களில் இன்று (01) பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கொழும்பில் மூவாயிரத்து 500 பொலிஸ் அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 02 பக்கம்

### உஷ்



**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை கொழும்பில் இரகசியமாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.**

**பொதுஜன பெரமுனவுக்குள் ஏற்பட்டுள்ள உட்கட்சிப் பூசல்கள் காரணமாக தாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமரப்போவதாக சஜித்திடம் தெரிவித்துள்ள இந்த எம்.பிக்கள், தங்களுக்கு அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கோரியுள்ளனர்.**

**இந்தச் சந்திப்பு பொதுஜன பெரமுன மேலிடத்திற்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.**




# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஆலோசனைகளைப் பெற அமைச்சு ஏற்பாடு

(கே. சுபானி)

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள நீதி, சிறைச்சாலைகள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒவ்வொரு தனிநபருக்கும் குறிப்பாக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இற்கமைய இம்மாதம் 30ஆம் திகதிவரை பொதுமக்கள் தங்கள் ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்க முடியும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்று எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானங்களை எடுத்ததன் பின்னர் சட்டமூலம் தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டமூலத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அண்மையில் அரசாங்கத்தினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதுதொடர்பில் சில தரப்பினர் ஆட்சேபனைகளை வெளியிட்டனர்.

இந்நிலையில் குறித்த சட்டமூலம் தற்காலிகமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை நிறுத்துவதற்கு நீதி அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொத்மலை நீர்த்தேக்கத்தில் ஆணின் சடலம் மீட்பு

(எஸ்.கணேசன், பி.கேதீஸ்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து ஆணின் சடலம் ஒன்று நேற்று (30) மதியம் மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

கொத்மலை நீர்த்தேக்கத்தில் சடலமொன்று மிதப்பதைக்கண்ட பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஆண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரிழந்தாரா அல்லது நீர்த்தேக்கத்தில் பாய்ந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து நீர்த்தேக்கத்தில் எறிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சுமார் 35ற்கும் 50ற்கும் இடையிலான வயது மதிக்கதக்க ஆண் எனத் தெரிவித்த பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தெற்கில் தீவிரமாகும்...

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

தற்போதைய நாட்களில் எலிக் காய்ச்சல் காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் தீவிரமாக பரவி வருகிறது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் காலி மாவட்டத்தில் மாத்திரம் 229 நோயாளர் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் 19 மரணங்களும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக சுத்தமற்ற நீர், ஈரமான மண் மற்றும் சேற்றில் தொழில் புரிவர்களையே இந்த நோய் விரைவாக தொற்றுகின்றது. விவசாயிகளுக்கு மாத்திரமின்றி கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவர்கள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள், கறுவா மற்றும் தேயிலை பயிர்ச்செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இந்த நோயினால் பாதிப்படைகிறார்கள்.

கடுமையான காய்ச்சல், உடல் வலி, தசை வலி, கண் சிவத்தல் போன்றன இந்த நோயின் அறிகுறிகளாகும். இருந்தபோதும், ஏனைய நோய் அறிகுறிகள் எதுவுமின்றி காய்ச்சல் மாத்திரம் இருந்தாலும் எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மருத்துவர்களின் ஆலோசனையின் பிரகாரம் மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்றார்.

## பிரதான கட்சிகளின்...

(நா.தினுஷா)

நாட்டில் பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியன கொழும்பில் தமது மேதினக் கூட்டங்களையும் பேரணிகளையும் இன்று (01) நடத்தத் திட்டமிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கொழும்பு, ஏ.இ.குணசிங்க விளையாட்டு மைதானத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் அந்தக் கட்சியின் பேரணி பிற்பகல் ஒரு மணிக்கு மாளிகாவத்தை பி.டீ.சிறிசேன விளையாட்டு மைதானத்துக்கு அருகிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

கொழும்பு, விஹாரமா தேவி பூங்காவுக்கும் நகரசபைக்கும் இடைப்பட்ட பகுதியில் பிற்பகல் 4.00 மணிக்கு மே தினக் கூட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளதுடன், அந்தக் கட்சியின் பேரணி பிற்பகல் 2.00 மணிக்கு பீ.ஆர்.சீ. மைதானத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் காலை 9.00 மணிக்கு சுகததாச மைதானத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. ஆனால், இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தலைமையிலான உத்தரசபா கூட்டணியின் முதலாவது மேதினக் கூட்டம் பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸின் மே தினக் கூட்டமும் பேரணியும் கண்டி நகரில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் கூட்டம் பிற்பகல் 1.00 மணிக்கு நகரசபைக்கு அருகில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், பேரணி பிற்பகல் 2.00 மணிக்கு கண்டி சஹஸ் உயணவில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொரளை, கெம்பல் விளையாட்டு மைதானத்தில் மேதினக் கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளதுடன் தேசிய ஜனநாயக முன்னணியின் மே தினக் கூட்டம் ஸ்ரீசமுத்தா ஜயந்தி கேட்போர் கூடத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

## தொழிலாளர் தினம்...

சர்வதேச தொழிலாளர் தினம் இன்றாகும். தொழிலாளர்களின் பொருளாதார சமூக சாதனைகளைக் கொண்டாடும் நோக்கிலும் உழைப்பாளர்களை மதிக்கும் முகமாகவும் ஆண்டுதோறும் மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது.

1886ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள் 08 மணிநேர வேலை கேட்டு மகத்தான போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அன்றைய நாளைக் குறிக்கும் விதமாக மே மாதம் முதலாம் திகதியை உழைப்பாளர் தினமாக உலகம் கொண்டாடுகிறது.

## அமைச்சரவை மாற்றத்தை...

அமைச்சுப் பதவி வழங்கப் பட வேண்டிய பொதுஜன பெரமுன உறுப்பி னர்களின் பட்டியலும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவுக்கு பல மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை, அமைச்சரவை மாற்றம் என்பது முழுக்க முழுக்க ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு அமையவே இடம்பெறுவதாகவும் கட்சி என்ற ரீதியில் அதில் தலையிட மாட்டோம் எனவும் பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் யோசனை முன்வைக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 13 மாவட்டங்களில்...

தற்போதைய நாட்களில், மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகும் என்பதுடன், அதன்போது பலத்த மின்னல் பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், ஏற்படும் ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலையாளர் மலிந்த மிலாங்கொட தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இன்று மாலை கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகலாம்.

சப்ரகமுவ மாகாணம் உள்ளிட்ட களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும்.

காற்றின் வேகம் மணிக்கு 20 – 30 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும். அநேகமான சந்தர்ப்பங்களில் தெற்கு பகுதியை நோக்கியே காற்று நகர்ந்துச் செல்லும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் கடற் பிரதேசங்களில் காற்று அதிகரித்து காணப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி வேட்பாளர்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அக்கட்சியின் அமைச்சர்கள் பலர் அரசியல் மேடைகளில் கருத்துகளை வெளியிட்டு வருவதுடன், கட்சிக்குள் அது தொடர்பில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இனிமேல் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துகளை வெளியிடுவது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவர் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க மற்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் அண்மையில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தனர்.

# 5 மாதங்களில் 11 சிறுவர்கள் யாழில் தற்கொலை

(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்குட்பட்ட 11 சிறுவர்கள் தவறான முடிவினை எடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸாரின் புள்ளிவிபரம் ஊடாகவே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

குறித்த தகவலின் பிரகாரம் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு 175 பேர் தவறான முடிவெடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர். இவர்களில் 09 பேர் 18 வயதுக்குள் உட்பட்ட சிறுவர்களாவர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 116 பேரும் யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 59 பேரும் உயிரை மாய்த்துள்ளனர்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் வாரம் வரையிலான காலப் பகுதியில் 54 பேர் உயிரை மாய்த்துள்ளனர். அவர்களில் இருவர் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களாவர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 39 பேரும் யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 15 பேரும் உயிர் மாய்த்துள்ளனர்.

அதேவேளை, இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 50 பேர் உயிர் மாய்க்க முற்பட்ட நிலையில், உறவினர்களால் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

***(தற்கொலை என்பது தவறான தீர்மானமாகும். அதனைத் தவிர்ப்பதற்கு உளவள ஆலோசனைகளைப் பெற 1926 என்ற சுகாதார அமைச்சின் துரித இலக்கத்துக்கு அழைக்க முடியும்.)***

## அரச நிறுவனங்களால்...

இவ்வாறான மறுசீரமைப்பு நடவடிக்கையானது சர்வதேச நாணய நிதியத்துக்கன்றி இலங்கை மக்களுக்கே நன்மையளிக்கும் என்றார்.

“சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மிக நீண்ட கலந்துரையாடலின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டு நமது நாட்டுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது. அதற்காக நிதி அமைச்சின் அதிகாரிகளும் அரசியல் பிரமுகர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளின் தலையீட்டை நிராகரிப்பதானது காலாவதியான யோசனையாகும்” என சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார்.

## விசேட பொலிஸ் பாதுகாப்பு...

இதேவேளை, கவனமின்றி பொருத்தமற்ற முறையில் வீதிகளில் வாகனங்கள் தரிக்கப்பட்டிருந்தால் அவற்றை எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அதற்கான கட்டணத்தை அறவிடவும், அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச தொழிலாளர் தினத்தில் பேரணிகள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கொழும்பு நகரம், நுகேகொடை பிரதேசம், கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா போன்ற பிரதேசங்களில் முக்கியமான மேதினக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த பிரதேசங்களின் போக்குவரத்து வசதிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

கொழும்பு நகரில் முன்னெடுக்கப்படும் மேதின பேரணிகள் மற்றும் கூட்டங்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக 3,500 வரையிலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முறையற்ற வகையில் பேரணிகளை முன்னெடுத்தால் அவசியமற்ற ரீதியில் வாகன நெரிசல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதுடன், வாகன சாரதிகளும் நெருக்கடிக்குள்ளாகுவதற்கான சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. சுகததாச விளையாட்டரங்கில் முன்னெடுக்கப்படும் மேதினக் கூட்டத்துக்காக மெடிபார்க் பிரதேசம், புளுமெண்டல் வீதி உள்ளிட்ட விளையாட்டரங்கை அண்மித்த பிரதேசங்களில் வாகனங்களை தரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாகனம் நிறுத்துவதற்கான ஆலோசனைகளை பொலிஸ் அதிகாரிகள் பெற்றுக்கொடுப்பார்கள்.

கெம்பல் பிட்டியில் இடம்பெறும் கூட்டத்தில் பங்கேற்கும் பஸ்களை தரிப்பதற்காக யு.டீ.பெரேரா மாவத்தை, ஸ்ரீதம்ம மாவத்தை, பேஸ் லைன் வீதி தெமடகொட முதல் சிறைச்சாலை வரையிலான வீதியின் ஓரப்பகுதிகள் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொதுவாக வாகனத் தரிப்பிடமாக கண்ணங்கர கல்லூரி பிரதேசம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் ஒன்றுகூடுபவர்களுக்காக மடபார்க் வாகனத் தரிப்பிடமும், சேன்டஸ் தனியார் பஸ் தரிப்பிடமும், நூறு அடி கனரக வாகன தரிப்பிடம், வேல வீதி போன்ற பிரதேசங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

எவ்லொக் பீ.ஆர்.சி. மைதானத்தில் இடம்பெறும் கூட்டத்துக்காக ஆனந்த சுவாமி மாவத்தை, நிதாஸ் மாவத்தை, ரீட் மாவத்தை, தர்மபால மாவத்தை, எப்.ஆர். சேனாநாயக்க மாவத்தை சந்தி முதல் செஞ்சிலுவை சங்க மாவத்தை உள்ளிட்ட பிரதேசங்களும், மாக்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, ஹோட்டன் பிரதேசம் வரையிலான பகுதி, கண்ணங்கரமாவத்தை முதல் சொய்சா மாவத்தை வரையிலான பகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவை சங்க சந்தியில் ஆரம்பித்து ஹைர்ட் பார்க் வரையிலான பேரணிக்காக, ஒக்சோல் வீதி வாகனத் தரிப்பிடத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கிறீன் பார்க் பிரதேசத்தில் இடம்பெறும் கூட்டத்துக்காக பிலவர் வீதியும், கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இடம்பெறும் பேரணிக்காக மில்தென் பெரேரா மாவத்தை வாகனத் தரிப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நுகேகொட, கண்டி போன்ற பிரதேசங்களிலும் பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட்டுள்ளன. கண்டி நகரினூடாக பயணிக்கும் சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்துவது சிறந்ததாக இருக்கும்.

கவனமின்றி பொருத்தமற்ற முறையில் வீதிகளில் வாகனங்கள் தரிக்கப்பட்டிருந்தால் அவற்றை எடுத்துச் செல்ல நேரிடும். தனியான கட்டணமும் அறவிடவேண்டி ஏற்படும். அவ்வாறானவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவேண்டியும் ஏற்படும் என்றார்.

## அமைச்சின் செயலாளர்களுக்கு...

இந்த மதிப்பீட்டுத் திட்டத்தின்கீழ், வேலைத்திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் செயலாளர்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நலனுக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றத்தை அடைவது மிகவும் நெருக்கமாக கண்காணிக்கப்படும் மற்றொரு பகுதியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் தொடர்பான எந்த முடிவையும் எடுப்பதற்கு முன், செயலர்கள் செயலாற்றத் தவறிய பகுதிகளும் அவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான புள்ளிகளை வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.

அந்தந்த அமைச்சர் மற்றும் பிற அமைச்சுகளுடன் ஒருங்கிணைக்கும் திறன், மற்றைய அதிகாரிகளுடன் முரண்படும் பிரச்சினைகள் என்பனவும் மதிப்பீட்டுச் செயல்பாட்டில் கருத்தில் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், 65க்கு மேல் அதிக புள்ளிகளை பெற்றவர்கள் அதே அமைச்சில் தக்கவைக்கப்படுவார்கள் என்றும் 50 முதல் 65 வரை உள்ளவர்கள் இடமாற்றத்துக்கு பரிசீலிக்கப்படுவார்கள் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், 50 புள்ளிகளின் கீழ் பெறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்கள் அமைச்சின் செயலாளர் பதவியையும் இழக்க நேரிடலாம். அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இருப்பவர்கள் அவர்களது ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ள வேண்டியும் ஏற்படலாம் என்றும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சுகளின் செயலாளர்களாக பணியாற்றுவதற்கு அதிகாரிகளை தெரிவு செய்யும்போது இந்தப் புள்ளி முறைமை கவனத்தில் கொள்ளப்படும்.

அதிகாரிகள் மீதான தொடர் நடவடிக்கைகளுக்காக, காலாண்டு அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மக்களுக்கு சிறந்த மற்றும் திறமையான சேவை வழங்கப்படுவதை உறுதி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## நாட்டின் வெற்றிப் பாதைக்கு...

இட்டுச் செல்வதற்கு உழைக்கும் மக்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு கடந்த ஆண்டு மே தினத்தை கொண்டாடும் நேரத்தில் மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியில் இருந்ததால், அனைவரும் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்த சவாலான காலங்களில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான கடினமான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக, பொறுமையுடனும் தைரியத்துடனும் காத்திருந்த அனைத்து உழைக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கையின் உழைக்கும் மக்களின் பெருமையை உலகுக்குக் காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது இருப்பதோடு, இந்த இக்கட்டான நேரத்தில் குறுகிய அரசியல் நலன்களுக்கு இரையாகாமல் நாட்டை முதன்மைப்படுத்தி செயற்படுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க நாங்கள் எப்போதும் செயற்பட்டுவருவதோடு, அவர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகளை வென்றெடுப்பதன் மூலம், உழைப்புக்கு சரியான மதிப்புக் கிடைக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே இன்றைய நாளின் எமது எதிர்பார்ப்பாகும்.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்தாலும் உழைக்கும் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

2048ஆம் ஆண்டளவில் முன்னேற்றமடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான புதிய சீர்திருத்தப் பாதையில் ஒற்றுமையுடன் கைகோர்க் குமாறு அனைத்து உழைக்கும் மக்களையும் நான் அழைப்பதோடு, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் அர்த்தமுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்துக்காக அவர்களை வாழ்த்துகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சவால்களை ஏற்றுக்கொண்டு...

மக்களையும் மரியாதையுடனும் அபிமானத்துடனும் அழைப்புவிடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேதின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்கள் தங்கள் பாரம்பரியங்கள், வரலாறுகள் மற்றும் சாதனைகளை ஒவ்வொரு ஆண்டும் மே 1ஆம் திகதி அன்று கொண்டாடுகிறார்கள்.

1886ஆம் ஆண்டு எட்டு மணி நேர வேலை நாள் கோரி தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த சிக்காக்கோ நகர தொழிலாளர்களின் வரலாற்றுப் போராட்டத்தின் நினைவாக சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவதோடு, அந்த வரலாற்று சிறப்புமிக்க நாளை இலங்கை உழைக்கும் மக்களும் நினைவுகூருகிறார்கள்.

ஒரு நாடாக நாம் பல கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில், நமது நாட்டு உழைக்கும் மக்களும் உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாட வேண்டியுள்ளதோடு, பல ஆண்டு கால தூரநோக்கற்ற ஆட்சியால் ஏற்பட்ட தன்னிச்சையான போக்கின் விளைவே இதுவாகும்.

நாடு எதிர்கொண்டுள்ள பாரதூரமான பொருளாதார நெருக்கடியை தேசிய வளங்களை விற்று மூடிமறைக்கும் சிறுபிள்ளைத்தனமான, சாத்தியமற்ற, நிலைபேறற்ற தீர்வைக் கையாள்வதில் தற்போதைய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதோடு, நாடு தனது சகல தேசிய வளங்களையும் இழந்த பாலைவன நிலத்தை மட்டுமே இதனால் மீதப்படுத்தும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுப்பேற்றதன் மூலம் எமது நாடு வரலாற்று ரீதியிலான பின்னடைவைச் சந்தித்ததோடு, தற்போதைய நிர்வாகத்தின் மூலம், அந்த தோல்வியுற்ற பயணம் மிகவும் வெற்றிகரமாக முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

அதேசமயம் சீர்செய்யப்படுவதாக காண்பிக்கும் உண்மை நிலை கூறுவதை விட பயங்கரமானது என்பதோடு, பாரியதொரு ஆபத்து நம் முன்னே தோன்றியவாறு உள்ளது.

மக்களின் வாழ்க்கை நாளுக்கு நாள் கடுமையான படுகுழியில் விழுந்து கொண்டிருப்பதோடு, ஏராளமானோர் வேலை இழந்துள்ளனர். வேலையின் கண்ணியத்தை முற்றிலுமாக ஒழித்து அவர்களை அவமதிக்கும் நிலையை அரசாங்கம் எட்டியுள்ளது. பல ஆண்டுகளாக சம்பள அதிகரிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு அரசியல் பழிவாங்கல்கள் சக்திவாய்ந்ததொரு அடக்குமுறை சூழ்நிலையாக வளர்ந்துள்ளது.

நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான செலவினங்கள் 40 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளமை மிகவும் துரதிர்ஷ்டமாகும். 85வீத மக்கள் கடன் வாங்குவது, கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான செலவினங்களைக் குறைப்பது, சேமிப்புச் செலவுகள் என்றும் சுமார் 68வீத மக்கள் உண்ணும் உணவின் அளவைக் குறைத்தல், உணவின் எண்ணிக்கை மற்றும் உணவு வேளைகளை குறைத்தல் போன்ற துயரங்களையும் சந்தித்து வருகின்றனர்.

சனத்தொகையில் 14.3வீதமான பேர் வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழ்கின்ற நிலையில், பொருளாதார நெருக்கடியின் அழுத்தம் மிகவும் கடுமையானதாக இருக்கும் என மத்திய வங்கி கணிப்புகள் எதிர்வு கூறியுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில்தான் நமது நாடு தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறது.

எல்லா எதிர்பார்ப்புகளும் தொலைந்து, புன்னகைக்குப் பதிலாகக் கண்ணீரும் ஜனநாயகத்துக்குப் பதிலாக அச்சுறுத்தலும் அடக்குமுறையும் மக்கள் மீது அரசாங்கம் திணித்துவரும் சூழ்நிலையில்தான் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவதோடு, இந்நிலையை மாற்றி, மனித சுதந்திரத்தையும் நாட்டின் அபிவிருத்தியையும் நிலைநிறுத்த நிலைபேறான வேலைத்திட்டம் கொண்ட குழுவினால் மட்டுமே முடியும் என்பது இன்று நன்றாகவே நிரூபணமாகியுள்ளது.

தோல்வியுற்ற முதலாளித்துவம் அல்லது காலாவதியான சோஷலிசத்தில் இருந்து ஒரு நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்பது யதார்த்தமாவதோடு, முற்போக்குத் தேசிய வாதத்தை அடிப்படையாகக் கொண்ட நடுநிலையானதொரு பாதையால் மட்டுமே இதை மேற்கொள்ள முடியும்.

பிரிவினைவாதம், இனவாதம், பயங்கரவாதம் இல்லாத உன்னத நாடாக நமது நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொள்ளும் ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே என்பதோடு, இதன் நம்பகமான வேலைத்திட்டத்துடன் ஒரு வலுவான முகாமை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம் என தேசத்தின் சகல உழைக்கும் மக்களையும் மரியாதையுடனும் அபிமானத்துடனும் அழைக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் நிலை குறித்து சட்டத்தரணிகள் ஆராய்வு

(சி. திவியா)

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு சட்டத்தரணிகள் குழுவொன்று நேற்று (30) விஜயம் செய்திருந்தது.

அந்த ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை மீளப் பிரதிஷ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

இதனையடுத்து வெள்ளிக்கிழமை ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், விக்கிரகங்கள் வைப்பு செய்யப்பட்டமை மற்றும் ஆலயத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் பார்வையிடுவதற்காக குறித்த வழக்கில் ஆலயம் சார்பிலும் பாதிக்கப்பட்ட தரப்புகள் சார்பிலும் மன்றில் ஆஜராகி வாதப்பிரதிவாதங்களை முன்வைத்த சட்டத்தரணிகள் குழு நேற்று ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இதில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், வவுனியாவின் சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருஅருள், சட்டத்தரணிகளான திலீப் காந்தன்,



கீர்த்தனன், இளஞ்செழியன், திபின்சன் உள்ளிட்ட சட்டத்தரணி குழுவினர் சென்றிருந்தனர். இவர்களுடன் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சீ.வீ.கே.சிவஞானம், ஜி.ரி.லிங்கநாதன், சுகிர்தன், கேசவன் சயந்தன், ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றினால் இருவர் உயிரிழப்பு; நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

கொரோனா தொற்று காரணமாக இரு நாட்களில், இருவர் உயிரிழந்துள்ளதாக கொலன்னாவை திடீர் மரண பரிசோதகர் காஞ்சனா விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை, ஹமந்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய பெண்ணொருவரும் எட்டியாந்தோட்டை, பனாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவினால் உயிரிழந்த பெண் கடந்த 27ஆம் திகதி ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 28ஆம் திகதி உயிரிழந்துள்ளார். குறித்த ஆண் கடந்த 28ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் (29) உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், கொரோனா தொற்றுப்பரவல் சமூகத்தில் மீண்டும் பரவலடையும் ஆபத்து இருப்பதாகவும் குறிப்பாக முகக்கவசம் அணிந்து சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவது மிகவும் சிறந்ததாக அமையும் என்றும் திடீர் மரண பரிசோதகர் காஞ்சனா விஜேநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.டி.எச். வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் வைத்தியசாலை பணியாளர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நாட்டில் நேற்று முன்தினம் (29) ஐவருக்கு கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, இதுவரை அடையாளங்காணப்பட்ட 6 இலட்சத்து 72 ஆயிரத்து 159 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 18ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்:** தேவைக்கேற்பப் பணம் ஏதோ ஒரு வழியில் வந்து மகிழ்விக்கும், குழப்பமற்ற மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

**ரிஷபம்:** திட்டமிட்டப் பயணங்களால் இலாபம் உண்டு, தாய் மற்றும் தாய்வழி உதவிகள், வாகன சுகம் உண்டு.

**மிதுனம்:** புத்தி சாதுர்யமாக அனைத்திலும் வெற்றி காண்பீர்கள், அத்தியாவசியச் செலவுகள் இருக்கும்.

**கடகம்:** திடீர் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது. வாதத் திறமையைக் காட்டுவீர்கள், குடும்ப சுகம் உண்டு.

**சிம்மம்:** தேவையற்ற கவலைகளை விட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் இருங்கள். உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

**கன்னி:** வீணான டென்ஷன் வேண்டாம், உங்கள் பணம், பொருட்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**துலாம்:** தொட்டது துலங்கும் நாள், மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள். வெற்றியுடன் வீடு திரும்புவீர்கள்.

**விருச்சிகம்:** பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் தேவைக்கான பண வரவு உண்டு. சுறுசுறுப்பாக செயற்படுங்கள்.

**தனுசு:** எதிர்பாராத சுபச் செய்தியால் மன மகிழ்ச்சி கொள்வீர்கள். தெய்வ தரிசனம் செய்து கொள்வீர்கள்.

**மகரம்:** மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டா வாதம் செய்ய வேண்டாம். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** தொழிலிடத்திலுள்ள பெண் உத்தியோகத்தர்களால் இலாபங்கள் உண்டு. காதல் களியாட்டங்களில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** உடல், மனம் சோம்பிக் காணப்படும், வீண் டென்ஷன் வேண்டாம். தொழில் விடயத்தில் அக்கறையோடு செயல்படுங்கள்.

**திதி** : ஏகாதசி பி.ப.10.10 வரை பின் துவாதசி (வளர்)

**நட்சத்திரம்** : பூரம் பி.ப.5.51 வரை பின் உத்தரம்

**யோகம்** : சித்த யோகம் பி.ப.5.51 வரை

**வார சூலம்** : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : பி.ப. 11.54 – 12.54 மணி வரை

**ராகு காலம்** : 7.24 – 8.54 மணிவரை

**எமகண்டம்** : 10.24 – 11.54 மணிவரை

**குளிகை** : 1.24 – 2.54 மணிவரை

**சந்திராஷ்டமம்** : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : அச்சுவினி, மகம், மூலம்(பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** : ஏகாதசிவிரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

## "Women Plus Bazaar 2023" கண்காட்சி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்



இலங்கைப் பெண்களை வலுவூட்டும் நோக்கில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட "Women Plus Bazaar 2023" கண்காட்சி நேற்று(30) காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு சங்ரில்லா ஹோட்டலில் ஆரம்பமானது.

கொழும்பில் உள்ள எகிப்து அரபுக் குடியரசு தூதரகம், கொழும்பு மாநகர சபை, பெண்கள், சிறுவர் விவகாரங்கள், சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை ஆகியவை இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன. உள்ளூர் கைவினைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் பெண் தொழில்முனைவோரின் 200இற்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்களைக் கொண்டிருந்ததோடு, பெண் தொழில்முனைவோருக்கு கூடுதல் வாய்ப்புகளை வழங்கி அவர்களின் அதிக பங்களிப்பைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.



களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக கல்லூரி ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களின் பங்குபற்றலோடு திருமதி சாஜிதா பதவியேற்றுக் கொண்டார்.
(படம்; பேருவளை பீ.எம். முக்தார்)

# தொழிலாளர் வாழ்வின் விடியலுக்கு சகலரும் இணைந்து உழைப்போம்

## மே தினச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



உழைக்கும் மக்களின் வாழ்வில் நிரந்தர விடியல் பிறக்கவும், சகல இன மத சமூக மக்களும் சமவுரிமை பெற்று நிமிரவும் தொடர்ந்து உறுதியுடன் உழைப்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார். மேலும் அந்த செய்தியில், "உலகத்தொழிலாளர்களே, ஒடுக்கப்படுகின்ற தேச மக்களே, ஒன்று படுங்கள் என்ற மேதின அறைகூவலை ஏற்று, நாமும் அன்று எமது தேச விடுதலைப் போராட்டத்தின் வழி நின்று உழைக்கும் மக்களின் உரிமைக்காகவும் எழுச்சி கொண்டவர்கள்.

எவரும் எவரையும் அடிமை என்று கொள்ளாத சமத்துவ தேசத்தை வென்றிட புரட்சிகர இலட்சியக் கனவோடு நாம் நீதியான போராட்டக்களத்தில் நின்றவர்கள். நீதியான எமது உரிமைப்போராட்டம் சகோதர இயக்கங்கள் மீதான மேலாதிக்க வன்முறைகளாலும் நாம் வெறுக்கும் உள்ளியக்க படுகொலைகளாலும் அநீதியான அழிவு யுத்தமாக மாறிய போது, தீர்க்க தரிசனமாக எமது இலட்சிய பாதையை நாம் மாற்றியவர்கள்.

ஆனாலும் பயணத்தை நிறுத்தவில்லை. எந்த இலட்சிய கனவுகளுக்காக நாம் அன்று போராட எழுந்தோமோ அதே இலட்சிய கனவுகளுடனே நாம் வகுத்த தேசிய நல்லிணக்க பாதையிலும் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம். எமக்கு கிடைத்த அரசியல் பலத்துக்கு ஏற்ற வகையில் முடிந்தளவு எமது மக்களுக்கான வெற்றிகளையும் அடைந்து வருகின்றோம். அரசியலில் சுதந்திரம், பொருளாதாரத்தில் சமத்துவம், சமூகத்தில் சகோதரத்துவம், இத்தகைய நாகரீக தேசத்தை உருவாக்கவே நாம் நடைமுறையில் உழைத்து வருகின்றோம்.

உழைக்கும் மக்களின் பெயராலும், தமிழ் தேசிய இனத்தின் பெயராலும் வெறுமனே கூச்சலிடுவதால் எந்த கோட்டையின் கதவுகளும் திறக்காது. இன மத சமூக முரண்பாடுகளை வெறுமனே அறிக்கையிட்டு அதில் குளிர்காய்ந்து அர்த்தமற்ற அரசியல் நடத்துவதால் இருப்பதை விடவும் எல்லா பிரச்சினைகளும் கொழுந்து கூர்மையடையுமே தவிர நீதி ஒருபோதும் கிடைக்காது.

அதற்காக, எவரும் எவரிடமும் சரணாகதி அடைவதென்றோ சமத்துவ உரிமையற்ற சமரசங்களுக்கு செல்வதென்றோ அர்த்தமல்ல. கால மாற்றமும் சூழல் மாற்றமும் எமக்கு புதிய அனுபவங்களை கற்றுத்தந்திருக்கிறது.

அரசியல் அதிகாரங்களை வென்றெடுப்பதின் ஊடாக உழைக்கும் மக்களோ அன்றி எமது இன மத சமூக மக்களோ எவரிடமும் கையேந்தி வாழாத காலச்சூழலை நாம் படிப்படியாக உருவாக்கவே உழைத்து வருகின்றோம். அரசியல் பலம் போதிய அளவு எமக்கு கிடைத்திருந்தால் எமது மண்ணில் இன்னமும் அதிக மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். நீரில் வாழும் மீன்களைப்போல் நாமே என்றும் மக்கள் மத்தியில் நீங்காதிருப்பவர்கள்.

மக்களின் பிரச்சினைகள் சகலதையும் ஆழ்மன உணர்வுகளில் நாமே ஏந்தியிருப்பவர்கள். உழைப்பவர் இடர் தீர வறியோர் வாழ்வுயர நிலமற்றோர் வீடற்றோர் நிலை மாற, சமூக சமத்துவ நீதி நிலவ, பெண்களின் சமவுரிமை வெல்ல, வேலையற்ற இளைஞர் யுவதிகளின் தேவைகள் நிறைவேற, எல்லோரும் எல்லாமும் பெற்று சரிநிகர் சமனென்ற நிமிர் வாழ்வு மலர தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

# புற்றுநோய் சிகிச்சை கதிர்வீச்சு இயந்திரங்கள் கொள்வனவு; ஒப்பந்தம் தொடர்பில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர்

புற்றுநோய் சிகிச்சை கதிர்வீச்சு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கவனம் செலுத்தினார்.

சுகாதார அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில்(29) பாராளுமன்றத்தில் கூடியபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்படும் கதிர்வீச்சு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் குறித்து கவனம் செலுத்தினார்.

இந்த கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரங்கள் புதுப்பிக்கப்படவில்லை எனவும் புதிய கொள்முதல் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்படாத இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு தயார் நிலையில் இருப்பதாக அறியக் கிடைப்பதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இது தொடர்பாக நாட்டிலுள்ள விசேட வைத்திய நிபுணர்களிடம் மேலும் தகவல்களை கேட்டறிந்து சிறந்த இயந்திரங்களை கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்.

# ரணசிங்க பிரேமதாசவின் 30ஆவது சிரார்த்த தினம்





மறைந் த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 30ஆவது சிரார்த்த தினம் இன்று(மே 01) அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராக அரசியலில் பிரவேசித்து நாட்டின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக உயரும் அளவுக்கு நிதானத்தைக் கொண்டிருந்த தனித்துவமான தலைவரான ரணசிங்க பிரேமதாச, எண்ணற்ற பொதுப்பணிகளை நிறைவேற்றிய ஜனநாயக மக்கள் தலைவராக விளங்கினார். அன்னாரது சிரார்த்த தினத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் நேற்று மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை கொழும்பு ஸ்ரீ சுச்சரித மண்டபத்தில் ஞாபகார்த்த சமய நிகழ்வுகள் இடம்பெற்றன. மொரட்டுவ லுனாவ, உயன வீதியின் தர்ம போதகர் ஸ்ரீ போதிராஜாராம அதிபதியும் மொரவக களுபோவிட்டியன வரலாற்று சிறப்பு மிக்க ருவன்கந்த ரஜமஹா விகாரையின் நிர்வாகியும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள கற்கைகள் துறையின் பேராசிரியருமான சங்கைக்குரிய அகலகட சிறிசுமண தேரரால் போதனை நிகழ்த்தப்பட்டது.



எழுத்தாளர் பத்மா இளங்கோவன் எழுதிய 'சிறுவர் இலக்கிய நுட்பங்கள்', 'சிறுவர் தமிழ் அமுதம்', 'கொரோனாவின் தடங்களில்' ஆகிய 3 நூல்களின் வெளியீட்டு விழா காண்டீபன் தலைமையில் சனிக்கிழமை(29) இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் மூன்று நூல்களினதும் முதல் பிரதிகளை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.






இனியொரு விதி செய்வோம் (Reset Sri Lanka) நாடளாவிய கருத்தரங்குத் தொடரின் யாழ்ப்பாண தொழில்முனைவோருடனான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை (28) யாழ். திண்ணை ஹோட்டலில் வெற்றிகரமாக நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக நடத்தப்பட்ட இனியொரு விதி செய்வோம் தொழில் முனைவோர் நிகழ்ச்சித் தொடரின் முதல் கட்டத்தின் நிறைவுக்கூட்டம் இதுவாகும்.







# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 01ஆம் திகதி, திங்கட்கிழமை**

# சுமந்திரனின் கருத்து நியாயமானது

வடமேல் மாகாண ஆளுநரும், முன்னாள் கடற்படைத்தளபதியுமான வசந்த கரன்னாகொட மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்குத் தடைவிதித்திருப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த வாரம் அறிவித்தது.

இந்த அறிவிப்பையடுத்து அறிக்கையொன்றை வெளியிட்ட இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, ஜனநாயக ஆட்சி மற்றும் நல்லிணக்கக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் இலங்கை உறுதியான முன்னேற்றத்தை அடைந்துள்ள நிலையில், வசந்த கரன்னாகொடவுக்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள அறிவிப்பு கவலையளிப்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

இதேவேளை, முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொடவை நியாயப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடு, வருங்காலத்தில் நிறுவப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை தொடர்பில் சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அத்தகைய உள்ளகப்பொறிமுறையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

நல்லிணக்க செயன்முறைக்கு வெளிவிவகார அமைச்சு பொறுப்பாக இருக்கும் அதேவேளை, அமைச்சர் அலி சப்ரி இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்குரிய சட்டமூலத்தைச் சமர்ப்பிக்கவிருக்கின்றார். இருப்பினும், நல்லிணக்க செயன்முறையில் இலங்கையின் தலைமைத்துவம் மற்றும் அதன் நடவடிக்கைகள் குறித்து நாம் எமது அதிருப்தியைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருப்பதுடன், அவை போதியளவு சுயாதீனத்துவமற்றவையாகக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம் என்று இது குறித்துக் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவ்வாறிருக்கையில் 11 பேர் கடத்தல் மற்றும் படுகொலை விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை குறித்துக் கவலையை வெளிப்படுத்தி, அவரை நியாயப்படுத்துகின்ற இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடு, தாம் இதுவரை காலமும் கூறிய விடயங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைவதாகவும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

எனவே, சுயாதீனமானதும், மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதுமான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதாயின் அது இலங்கையர்களை உள்ளடக்கிய உள்ளகப்பொறிமுறையாக அமையக்கூடாது என்றும், மாறாக சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கிய பொறிமுறையாகவே அமையவேண்டும் என்றும் குறிப்பிட்ட சுமந்திரன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் தம்மிடம் கலந்துரையாடப்படவில்லை என்றும், அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கருத்து தமிழர்களைப் பொறுத்தவரை மிகவும் நியாயமான ஒன்றாகவே இருக்கிறது. போர்க்குற்றம் என்ற ஒன்று இலங்கையின் உள்நாட்டுப்போரில் நடைபெறவே இல்லை. மனித உரிமைகள் மீறப்படவே இல்லை என்று காலாகாலம் கூறிவரும் இலங்கை அரசு, இப்போது வசந்த கரன்னாகொட மீது அமெரிக்கா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கத் தயங்குவது ஏன்? அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை அமெரிக்கா முன்வைக்குமாயின் அதற்கெதிராக நீதிமன்றம் செல்லவும் முடியுமல்லவா?

இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது தடைகள் விதிக்கப்பட்டது இது முதற் தடவையல்ல. இலங்கைக்கான மலேஷிய பிரதி உயர்ஸ்தானிகராக 2009 - 2011 காலப்பகுதியில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் உதய பெரேரா அமெரிக்காவினால் போர்க்குற்ற சந்தேகநபராக அறிவிக்கப்பட்டது. அந்நாட்டுக்குள் நுழைவதற்கும் அவருக்கு தடை விதிக்கப்பட்டது.

போர்க்கால நடவடிக்கைகள் செயற்பாட்டுப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்த அவர், 2019இல் வழங்கப்பட்ட ஐந்தாண்டு பல்நுழைவு விசாவைப் பெற்றிருந்தாலும், அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு 2020ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2020 பெப்ரவரி 14ஆம் திகதி இராணுவத்தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் இவ்வாறு அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டது. அது மாத்திரமின்றி, கடற்படை அதிகாரி சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரி சுனில் ரத்னாயக்க ஆகியோருக்கும் இவ்வாறு தடை விதிக்கப்பட்டது. அதேபோல், முன்னாள் இராணுவத் தளபதி பிரபாத் புலத்வத்த மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டது. 2008இல் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தல் சம்பவத்தின் அடிப்படையில் இந்தத் தடை விதிக்கப்பட்டதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியது.

இவ்வாறு தடைகளை எதிர்நோக்கிய எவரும் அதற்கெதிராக மேன்முறையீடு செய்து அதில் வெற்றிகண்டதாகத் தெரியவில்லை. இந்தத் தடைகளுக்கு எதிராக பாதுகாப்புத் தரப்பில் வியாக்கியானங்கள் தெரிவிக்கப்பட்டாலும், அமெரிக்கா அவற்றைக் கண்டுகொண்டதாகவும் இல்லை. அப்படியாயின், இத்தடைகளை நியாயப்படுத்தும் அளவுக்கு அமெரிக்காவிடம் ஆதாரங்கள் இருக்கின்றன என்பதல்லவா அர்த்தம்?

இப்போதும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கேட்பதுபோல, இந்த தடைகளை ஏற்க மறுக்கும் இலங்கை அரசாங்கத்திடம் தமிழ் மக்கள் எவ்வாறு நீதியைப் பெறுவார்கள்? போர்க்கால மற்றும் அதன் பின்னரான மனித உரிமை மீறல்கள், கடத்தல், காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுக்கு இதுவரையும் எந்த நியாயத்தையும் பெற்றுத்தராத ஆட்சியாளர்கள் இனியும் நீதியைத் தர மாட்டார்கள் என்ற ஐயமே தமிழர் மனங்களில் உறுதியாக நிற்கிறது. இப்போது ரணில் அரசு நடந்துகொள்ளும் முறைமையும் அதனையே பறைசாற்றுகின்றது.

ஜனாதிபதி ரணில் இராஜதந்திர விடயங்களில் கில்லாடி. தமிழர்களுக்கு அரசியல் தீர்வைத் தருகிறேன் என்று ஒரு பக்கம் சொல்லும் அவர், சிங்கள மக்களை சமாளிக்க இப்படியான தடைகளை எதிர்த்தும் தனது அரசின் நிலைப்பாட்டை விளக்குகிறார். இப்படியான ஒருவரால் நேர்மையான, இதயசுத்தி கொண்ட தீர்வைத் தரமுடியுமா? அன்று மஹிந்த, கோட்டாபய, சிறிசேன கொண்டிருந்த நிலைப்பாடுகளையே ரணிலும் தொடர்கிறார். இப்படியான நிலையில், தமிழர்களுக்கு நீதியைத் தரும் வகையில் உள்ளகப்பொறிமுறை ஒன்று வருமாயின் அதன் சீத்துவத்தை சொல்லவும் வேண்டுமா? சுமந்திரன் இந்த விடயத்தில் கொண்டுள்ள நிலைப்பாடு மிகவும் வரவேற்கத்தக்கது. இதர தமிழ் அரசியல் தலைவர்களும் இந்த விடயத்தில் சமூகத்தின் பக்கம் நின்று தங்களின் நிலைப்பாட்டைத் தீர்மானிக்க வேண்டும்.

# மக்களால் இன்றும் நேசிக்கப்படும் தலைவர் பிரேமதாச!

**இலங்கையின் முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான ரணசிங்க பிரேமதாசவின் 30ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்.**

8 7 முதல் 1988 வரை பிரதமராகவும் 1989 முதல் 1993 வரை ஜனாதிபதியாகவும் பணியாற்றிய அவர் 1993ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தினப் பேரணியின்போது விடுதலைப்புலி தற்கொலை குண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியினூடாக இலங்கையில் ரணசிங்க பிரேமதாச பெற்ற அரசியல் உயர்வானது உண்மையில் ஒரு பாராட்டத்தக்க சாதனையாகும். ஐக்கிய தேசியக் கட்சி போன்ற ஒரு தேசியக் கட்சியில் வர்க்கம், சாதி, குலம், அந்தஸ்து போன்ற அடிப்படையில் சிங்கள சமூக ரீதியில் கீழ்நிலை அந்தஸ்து கொண்ட ஒருவர், கட்சி அரசியல் ஊடாக அதிகாரத்தின் உச்சத்திற்கு செல்வது என்பது ஓர் அரசியல் பரிணாமமாகும்.

உயர் வர்க்கம், மேட்டுக்குடி மக்கள், படித்த வர்க்கத்தினருக்கு மாத்திரமே உரிய கட்சி என்ற பார்வை இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு, புதிய வாக்காளர் அடித்தளத்தையிட்டு சாதாரண மக்களுக்குமுரிய கட்சியாக மாற்றியமைத்து, வெற்றியைத் தீர்மானிக்கும் தளமாக கிராமப்புற சிங்கள வாக்காளர் தளத்தை கட்டமைத்த பெருமையும் அவரையே சாரும்.
ஐக்கிய தேசியக் கட்சிக்கு எப்போதும் பெரும் சவாலாக அமைந்த விடயமே சிங்கள வாக்காளர் தளமாகும். அதுவரை கிராமப்புறங்களை ஆட்கொண்டிருந்த இடதுசாரி அரசியல் தரப்புகளை தோற்கடித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய உத்வேகத்தை சேர்ப்பித்த ஜனரஞ்சகத் தலைவராக திகழ்ந்தார்.

இந்நினைவுக் குறிப்பில் ரணசிங்க பிரேமதாசவின் குறிப்பிடத்தக்க அரசியல் பார்வையை நோக்குவது பற்றி இந்தப் பத்தி கவனம் செலுத்துகிறது.

ரணசிங்க பிரேமதாச 1924ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி மத்திய கொழும்பில் உள்ள கெசல்வத்தை என அழைக்கப்படும் வாழைத்தோட்டம் என்ற பகுதியில் உள்ள டயஸ் பிளேஸில் பிறந்தார். கொஸ்கொட ஹேகாலையைச் சேர்ந்த ரிச்சர்ட் ரணசிங்க மற்றும் ஹொரண பதுவிட்ட ஜயசிங்க ஆராச்சிகே என்சின ஹாமினே ஆகியோருக்கு ஐந்து பிள்ளைகளில் மூத்தவராகப் பிறந்தார். இவருடைய தந்தை ரணசிங்க இந்தியாவில் உள்ள ரிக்ஷாக்களை ஒத்த வண்டிகளை வாடகைக்கு எடுத்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

பிரேமதாச தனது ஆரம்பக் கல்வியை ஹார்வர்ட் மெதடிஸ்ட் பாடசாலை மற்றும் புனித லொரன்ஸ் கல்லூரியில் கற்றார். கேம்பிரிட்ஜ் உயர் தேர்வு வரையில் அவரது இடைநிலைக் கல்வி கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் அமைந்திருந்தது. பிரேமதாச புறக்கோட்டையில் உள்ள பூர்வாரம





விகாரையில் ஹேவாவிதாரண அறநெறிப் பாடசாலையில் பௌத்த போதனையையும் பெற்றதுடன், மிக இளம் வயதிலேயே அதாவது, அவரது 15ஆவது வயதிலேயே சமூக சேவையில் ஆர்வத்தோடு ஈடுபட்டு 1939இல் 'சுச்சரித' இயக்கத்தை ஸ்தாபித்தார்.

முன்னோடி தொழிற்சங்கவாதியும் இலங்கை தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகத் தலைவருமான அலெக்சாண்டர் ஏக்கநாயக்க குணசிங்க மூலம் பிரேமதாச தொழிற்சங்க இயக்கத்திலும் ஈர்க்கப்பட்டார். ஏ.ஈ.குணசிங்கவே பிரேமதாசாவுக்கு அரசியல் வழிகாட்டியாகவும் செயற்பட்டார். ஏ.ஈ.குணசிங்கவின் செல்வாக்குதான் பிரேமதாசாவை அவரது இளமைப் பருவத்தில் இடதுசாரியாக மாறாமல் தடுத்தது.

பிரேமதாச 1946இல் தொழிலாளர் கட்சியில் முழுநேர உறுப்பினராக இணைந்து கொண்டதோடு, 1949இல் தொழிற்கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து அடுத்த ஆண்டு அவர் கொழும்பு மாநகர சபைக்கு சென். செபாஸ்டியன் வட்டார வேட்பாளராகவும் போட்டியிட்டு வெற்றிபெற்று 1950இல் கொழும்பு மாநகர சபை உறுப்பினரானார். 1954இல் மீண்டும் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட அவர் 1955இல் கொழும்பு மாநகரப் பிரதி மேயராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

### ஐ.தே.கவில் இணைவு

ஒரு கட்டத்தில் பிரேமதாச தொழிற்கட்சியில் இருந்து விலகி ஐ.தே.கவில் இணைய முடிவு செய்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் தனக்குப் பிரகாசமான அரசியல் எதிர்காலம் இருப்பதாக அவர் உணர்ந்தார்.

பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த சில வாரங்களில் 1956ஆம் ஆண்டு தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி பொருத்தமான வேட்பாளரை நிறுத்துவதில் சிக்கல்களை எதிர்கொண்ட தேர்தல் தொகுதிகளில் சப்ரகமுவ மாகாணத்தின் ருவன்வெல்லவும் ஒன்றாகும். இத்தொகுதி 1947 மற்றும் 1952ஆம் ஆண்டுகளில் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் டொக்டர் என்.எம்.பெரேராவால் வெற்றிபெற்றது.

ருவன்வெல்லையில் என்.எம்.பெரேராவை எதிர்கொள்ள ஒரு வேட்பாளரை தேடுவதில் ஐ.தே.கட்சிக்கு சிரமம் ஏற்பட்டது. அப்போது ஐ.தே.கட்சியின் தலைமையிடம் இருந்து எதிர்பாராத அழைப்பு வந்தது. ருவன்வெல்லவில் என்.எம்.பெரேராவை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட பிரேமதாச விரும்புவாரா என்பதே அந்த அழைப்பாகும். பிரேமதாச கொழும்பில் பிறந்து வளர்ந்தவர் என்பதுடன், ருவன்வெல்ல வாக்காளர்களுடன் எதுவித தொடர்பையும் அவர் கொண்டிருக்கவில்லை. ஆனாலும், அவர் அச்சவாலை ஏற்கத் தயாராக இருந்தார்.

1956 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கசப்பான தோல்வியைத் தழுவியது. ஐ.தே.க எட்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. பிரேமதாசவும் ருவன்வெல்ல தொகுதியில் தோல்வியைத் தழுவினார். என்.எம்.பெரேரா 14,083 மற்றும் பிரேமதாச 7,855 என வாக்குகளைப் பெற்றனர். இதேவேளை, ஏ.ஈ.குணசிங்கவும் கொழும்பு மத்திய தொகுதியில் தோல்வியடைந்திருந்தார். தோல்வியைத் தொடர்ந்து ஏ.ஈ.குணசிங்க, தேர்தல் அரசியலில் இருந்து விடைபெற்று இராஜதந்திர பதவிகளை ஏற்று வெளிநாடு சென்றார். தனது அரசியல் ஆசான் ஓய்வு பெற்றதன் மூலம், தான் பிறந்து வளர்ந்த கொழும்பு மத்திய தொகுதியில் தனது பார்வையைச் செலுத்தி எதிர்கால அரசியல் பயணத்தை அமைக்க முடியும் என பிரேமதாச கருதினார்.

அந்நேரத்தில் இன விகிதம் சுமார் 35% சிங்களம், 32% முஸ்லிம் மற்றும் 28% தமிழ் என்றவாறு அமைந்திருந்ததோடு, சிங்கள வாக்குகளே பிரேமதாசவின் முக்கிய இலக்காக இருந்த போதிலும், அவர் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களையும் விடாப்பிடியாக கவனித்து வந்தார். மார்ச் 1960இல் தேர்தல்கள் நடைபெற்ற போது, மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் இரண்டு வேட்பாளர்களை ஐக்கிய தேசியக் கட்சி முன்னிறுத்தியது. ஒருவர் டொக்டர் எம்.சி.எம். கலீல். மற்றையவர் ரணசிங்க பிரேமதாச ஆவார். அவருக்கு டட்லி சேனாநாயக்க மற்றும் ஜே.ஆர்.ஜயவர்தன ஆகிய இருவரது அங்கீகாரமும் ஆதரவும் இருந்தது.

மார்ச் 1960 தேர்தலில் பிரேமதாச கொழும்பு மத்திய தொகுதியில் மூன்றாவது இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டொக்டர் கலீல் 33,121 வாக்குகள் பெற்று முதலிடம் பிடித்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் பீட்டர் கியூனமேன் (சி.பி.) 30,574 வாக்குகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்ததோடு, 29,828 வாக்குகளைப் பெற்று பிரேமதாச மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இதனைத் தொடர்ந்து ஜூலை 1960இல் புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டன. பிரேமதாச தனது விருப்பு வாக்குகளை 35,035 ஆக அதிகரித்தாலும், நான்காவது இடத்தையே அவரால் பெறமுடிந்தது. ஸ்ரீல.சு.க.வின் சேர் ரசிக் பரீட், கம்யூனிஸ்ட் கட்சியின் பீட்டர் கெயூன்மன் மற்றும் ஐ.தே.கவின் கலாநிதி கலீல் ஆகியோர் முறையே 45,342, 38,663 மற்றும் 37,486 என முதலாம்,இரண்டாம் மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்து தேர்வானார்கள். பிரேமதாச வெறும் மூன்றே மாதங்களில் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறினார். அவர் விரக்தியடைந்தாலும், கிட்டிய காலப்பகுதிக்குள் நகரசபை அரசியலுக்குத் திரும்பியதோடு, 1962இல் மாநகர சவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அவ்வாறு இருந்துகொண்டே கொழும்பு மத்திய தேர்தல் தொகுதி முழுவதுமாக கவனத்தை குவிக்கத் தொடங்கினார்.

ரணசிங்க பிரேமதாச 1964 ஜூன் 23 அன்று தனது 40ஆவது பிறந்தநாளில் ஹேமா விக்கிரமதுங்கவை மணந்து இல்லற வாழ்வில் இணைந்தார். ஹேமாவைத் திருமணம் செய்து கொண்ட பிறகு அரசியலில் அவர் பெரிய பின்னடைவைச் சந்தித்ததில்லை. ஒரு நிலையான அரசியல் ஏற்றமாகவே அவருக்கு அமைந்தது.

பிரேமதாசாவுக்கு துலாஞ்சலி என்ற மகளும், தற்போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகிக்கும் சஜித் என்ற மகனும் உள்ளனர்.

1965இல் மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் மத்திய கொழும்பு தொகுதியில் இரண்டு வேட்பாளர்களை நிறுத்தியது. ஒருவர் ஆர்.பிரேமதாச. மற்றவர் பழீல் கபூர். பிரேமதாச 64,438 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தார். பழீல் கபூர் 68,372 வாக்குகளைப் பெற்று முதலிடம் பிடித்தார். பீட்டர் கியூன்மேன் 41,478 வாக்குகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். 66 ஆசனங்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, டட்லி சேனநாயக்காவை பிரதமராகக் கொண்டு ஏழு கட்சிகளின் கூட்டணி அரசாங்கத்தை அமைத்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியும் (ITAK) அரசாங்கத்தில் அங்கம் வகித்திருந்தது. முன்னாள் சட்டமா அதிபர் எம்.திருச்செல்வம் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாததால், செனட் சபைக்கு நியமிக்கப்பட்டு உள்ளூராட்சி அமைச்சராக பதவியேற்றார். ரணசிங்க பிரேமதாச உள்ளூராட்சி பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார் என்பது பலரையும் ஆச்சரியப்படுத்தும் விடயமாக அமைந்திருந்தது.

திருகோணமலை கோணேஸ்வரம் கோவில் புனித பிரதேச வலய விவகாரப் பிரச்சினையில் டட்லி சேனநாயக்கவுடன் எம்.திருச்செல்வம் உடன்படவில்லை என்பதால் செப்டெம்பர் 15, 1968 அன்று அவர் இராஜினாமா செய்தார். 1968ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதி உள்ளூராட்சி அமைச்சராக திருச்செல்வத்தின் இடத்திற்கு ரணசிங்க பிரேமதாச நியமிக்கப்பட்டார். உள்ளூராட்சி அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ரணசிங்க பிரேமதாச, புறக்கோட்டையிலுள்ள பூர்வாரம விகாரைக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

1970ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)




# இன்றைய நாளில்...

* 1753 – தாவரவியல் பெயரிடலுக்கான அனைத்துலக நெறிமுறையினால், தாவர வகைப்பாட்டியல் அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1776 – இல்லுமினாட்டி குழுமம் ஆரம்பிக்கப்பட்டது.
* 1834 – பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.
* 1840 – உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டக்கூடிய தபால்தலையான பென்னி பிளாக், ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.
* 1886 – ஐக்கிய அமெரிக்காவில் 8 மணிநேர வேலை நாளை அறிவிக்க வேண்டி வேலைநிறுத்தம் ஆரம்பமானது. இந்நாள் பின்னர் மே தினம் எனவும் தொழிலாளர் தினம் எனவும் உலகெங்கும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.
* 1930 – குறுங்கோள் புளூட்டோவின் பெயர் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
* 1956 – யோனாஸ் சால்க்கினால் தயாரிக்கப்பட்ட போலியோ தடுப்பூசி பொதுமக்களின் பயன்பாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1960 – இந்தியாவில் குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்கள் அமைக்கப்பட்டன.
* 1978 – ஜப்பானியரான நவோமி யூமுரா, தன்னந்தனியாக வடமுனையை அடைந்த முதல் மனிதர் என்ற சாதனையைப் படைத்தார்.
* 1989 – இந்திய அமைதி காக்கும் படையின் வவுனியா சிறையை உடைத்து விடுதலைப் புலிகளும் பொதுமக்களுமாக 43 பேர் தப்பி வெளியேறினர்.
* 1993 – ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா மே தினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுத்தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார். டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
* 2011 – அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின் லேடன் ஐக்கிய அமெரிக்கக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# சேதவத்தை களஞ்சியசாலையிலிருந்து பாவனைக்குதவாத அரிசி மீட்பு

## இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டுள்ளதாக கொத்தட்டுவ பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தகவல்

### இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தவும் நடவடிக்கை



(நா. தினுஷா)

வெல்லம்பிட்டிய, சேதவத்தை பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலையொன்றிலிருந்து பாவனைக்கு பொருத்தமற்ற 1080 தொன் அரிசி மீட்கப்பட்டுள்ளதாக கொத்தட்டுவ பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் இந்த அரிசி, 2022 டிசம்பர் மாதத்துடன் காலாவதியாவதாக அந்த அரிசி பொதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட அரிசி தொகையில் வண்டுகள் மற்றும் புழுக்கள் காணப்பட்டதாக கொத்தட்டுவ பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அஜித் விதானகே தெரிவித்தார்.

களஞ்சியசாலைக்கு சீல் வைத்து, நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று அரிசி மாதிரிகளை அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தக் களஞ்சியசாலையில் முறையற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக எங்களின் பணிப்பிரிவுக்கு நேற்று முன்தினம் (29) நள்ளிரவு தகவல் கிடைத்தது. அதுதொடர்பான விசாரணைகளை முன்னெடுத்ததன் பின்னரே இந்தக் களஞ்சியசாலையை பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்களின் பாவனைக்குப் பொருத்தமற்ற 10 இலட்சத்து 80 ஆயிரம் கிலோ கிராம் அரிசி இங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. தொகுதியளவில் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டு அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி பரிசோதித்தன் பின்னரே அரிசியை பயன்படுத்த முடியுமா, முடியாதா என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

இந்த அரிசி இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகவே நாங்கள் கருதுகிறோம். முறையான களஞ்சியப்படுத்தல் இன்மையின் காரணமாகவே இந்த அரிசி தொகைக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

பெருந்தொகைப் பணம் செலுத்தப்பட்டே இந்த அரிசி தொகை இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது. இதுவொரு தேசிய குற்றமாகும். இந்த முழு அரிசியையும் அழிக்கப்போவதாகவே அநேகமானவர்கள் கருதுவார்கள். நாங்கள் அதற்காக கடமையாற்றவில்லை. மக்களுக்கு பாதுகாப்பான உணவைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் வர்த்தகர்களுக்குப் பிரச்சினை ஏற்படாத வகையில் இதனை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுக்கவுமே நாங்கள் கடமையில் இருக்கிறோம்.

ஆகவே, இவ்வாறான களஞ்சியசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆலோசனைகளின்றி களஞ்சியசாலைகளை முகாமைத்துவப்படுத்துவதாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

# உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க காங்கிரஸ் என்றும் உறுதுணையாக நிற்கும்

## மே தின வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் ஜீவன் தொண்டமான்



"மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை முதலாளிகள் என்ற பண முதலைகளும் உழைப்பை சுரண்டிய அதிகார வர்க்கமும் அடக்கி ஆண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததுபோல் அவர்கள் உழைப்பால் உயர்ந்து உச்சம் தொடுவதற்கு என்றும் நாம் பக்கபலமாக இருப்போம். உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலிப்போம்" என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"உலகிலுள்ள தொழிலாளர்கள் ஓரணியில் திரண்டு உரிமைகளுக்காக போராடி வெற்றிகண்ட - உயரிய வெற்றி திருநாளாகவே மே தினம் நினைவுகூரப்படுகின்றது. தங்களின் உயிரை தியாகம் செய்தே தொழிலாளர் வர்க்கத்துக்கு அன்று உரிமைகள் வென்று கொடுக்கப்பட்டன. தொழிலாளர்கள் உழைப்பால் உயர்ந்து நிற்க, தமது உயிரைத் தியாகம் செய்த அத்தனை ஊழிய படையினருக்கும் எங்கள் வீர வணக்கம். தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எமது மலையக மண்ணில் உயிர் தியாகம் செய்த மலையக தொழிற்சங்க தியாகிகளையும் இந்த உன்னதமான தருணத்தில் நெஞ்சில் இருத்தி நினைவுகூருகின்றேன்.

உழைக்கும் வர்க்கத்தினரின் துயர் துடைக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அன்றுமுதல் இன்றுவரை எல்லா வழிகளிலும் போராடியுள்ளது. இனியும் அதே வழியில் தான் பயணிக்கும். அதுமட்டுமல்ல, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களும் உழைப்பால் உயர்ந்து நிற்பதற்கான சகலவித ஏற்பாடுகளையும் செய்வதற்கு இனிவரும் நாட்களில் முன்னுரிமையும் முக்கியத்துவமும் வழங்கப்படும்.

இலங்கையிலுள்ள தொழிலாளர்களில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வேறுவிதத்தில் நடத்தப்படும் நிலை காணப்படுகின்றது. இந்நிலைமை மாறவேண்டும். அவர்களும் சமமாக நடத்தப்படும் வகையில் தொழில்சார் சட்டங்கள் மறுசீரமைக்கப்படவேண்டும். அதற்காக பாராளுமன்றத்தில் எமது குரல் ஓங்கி ஒலிக்கும்.

அதேபோல் புலம்பெயர் தொழிலாளர்களாக உள்ளோரிலும் எமது மலையக சொந்தங்களின் பங்களிப்பு ஏராளம். அவர்கள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆடை தொழிற்சாலை, கட்டுமான தொழில் உள்ளிட்டவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

உழைக்கும் வர்க்கத்தின் துயர் துடைக்கவும் உரிமைகளை வென்றெடுக்கவும் காங்கிரஸ் என்றும் உறுதுணையாக நிற்கும். நாட்டையும் வீட்டையும் தமது உழைப்பால் உயரவைக்கும் பாட்டாளி சொந்தங்களுக்கு மே தின நல்வாழ்த்துகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமத்துவ கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சியில்

(மு.தமிழ்ச்செல்வன்)

சமத்துவக் கட்சியின் மே தினக் கூட்டம் 'அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளைமீட்டெடுப்போம்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இன்று இடம்பெறும்.

இது தொடர்பில் அக்கட்சியின் மே தின செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ் மக்கள் ஏற்கனவே போரின் நெருக்கடியையும் பொருளாதார நெருக்கடியையும் மிக நீண்ட காலமாகச் சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள். அந்த நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு முன்னர் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியும் தொடரும் இன ஒடுக்குமுறையின் நெருக்கடியும் இணைந்து மேலும் பெரிய நெருக்கடிச் சுமையை உருவாக்கியுள்ளன. இதற்குள் புதிய பயங்கரவாதச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. நாட்டில் சுதந்திரத்தையும் அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் உருவாக்குவதற்குப் பதிலாக அதற்கு எதிராகவே ஆட்சி நடத்தப்படுகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு சிந்திய கண்ணீரும் இரத்தமும் கொஞ்சமல்ல. இதிலிருந்து நாம் மீளவேண்டும். இனியும் சம்பிரதாயமான அரசியல் வாக்குறுதிகளை நாம் நம்ப முடியாது. சம்பிரதாயமான மே தின நிகழ்வை நடத்துவதில் அர்த்தமில்லை. இன்று பிற நாடுகளிலும் சர்வதேச வங்கிகளிடத்திலும் அடமானமாகியுள்ள நாட்டில் நாம் போராடாமல் இருக்கமுடியாது. எமது போராட்டம் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானதாக இருக்கட்டும். மக்களின் விடுதலையை நோக்கியதாக அமையட்டும் என்றுள்ளது.

# தேசத்தின் முன்னேற்றத்துக்காக உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்போம்

## அங்கஜன் எம்.பி. மே தின வாழ்த்து

(சாவகச்சேரி நிருபர்)



தேசத்தின் முன்னேற்றத்துக்காக உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க குரல் கொடுப்போம் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

உழைப்பாளர் தினத்தையொட்டி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். மேலும் அவர் தனது செய்தியில்;

பல புரட்சிகள் மற்றும் போராட்டங்களின் பயனாக உழைப்பாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாக மே தினம் கொண்டாடப்படுகிறது.

உழைப்புக்கேற்ற ஊதியம், 8 மணிநேர வேலை நேரம் மற்றும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை போன்ற பல உரிமை களை இதனூடாக தொழிலாளர்கள் வென்றெடுத் துள்ளனர். உண்மையான உழைப்பும் அர்ப்பணிப்புமே ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப உதவிபுரிகின்றது.

ஆனால், இன்று எமது நாட்டில் பொருளாதார நெருக்கடி மற்றும் ஆட்சியாளர்களது அடக்குமுறை காரணமாக இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் அதேவேளை பலர் தொழில்களையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக அரசாங்கத்தால் புதிதாக கொண்டுவர முயற்சிக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொழிற்சங்கங்களின் மற்றும் தொழிலாளர்களின் கருத்து சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் காணப்படுகிறது. கருத்து சுதந்திரத்துக்குக் கூட தடைபோடும் சட்டங்களை நாம் ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றுமே தொழிலாளர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பழமை வாய்ந்த கட்சி. இன்று பல்வேறு காரணிகளாலும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்து அவர்களின் அர்ப்பணிப்பான உழைப்பினூடாக நாட்டைக் கட்டியெழுப்ப நாம் என்றும் முன்னிற்போம்.

எமது புலம்பெயர் உறவுகள் தேசம் கடந்து உறவுகளின் மீட்சிக்காக அரும்பாடுபடுகின்றனர்.

அரசால் செய்ய முடியாத அபிவிருத்திகளைக் கூட இன்று அவர்கள் தமது கிராமந்தோறும் நடத்திக் காட்டுகின்றனர்.

இந்த உழைப்பாளர் தினத்தில் தேசம் கடந்து, உணர்வுகளை மனதில் சுமந்து வாழும் புலம்பெயர் உறவுகளுக்கும் தொழிலாளர் தின வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு; காலியில் இலக்கிய விழா











சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற காலி இலக்கிய விழாவை மீண்டும் பிரமாண்டமாக நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கு இணையாக பல்வேறு கலை அம்சங்கள் அடங்கிய தொடர் நிகழ்ச்சிகளை காலி, மாத்தறை, அஹங்கம மற்றும் ஹிக்கடுவ ஆகிய பிரதேசங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 28ஆம் திகதி இடம்பெற்றது.

இதற்கிணங்க காலி இலக்கிய விழாவை 2024 ஜனவரியில் நடத்த இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

நவீன கலை ஊடகம், இசை, ஆடை வடிவமைப்புக் கண்காட்சி, புத்தகக் கண்காட்சி, கொண்டாட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கலை அம்சங்களுடன் இந்தத் தொடர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதன் முக்கியத்துவத்தை இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சிக்கு இணையாக சுற்றுலாத் துறையை இலக்காகக்கொண்ட கலை அம்சங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன.

சுற்றுலாத்துறையை புத்துயிர் பெறச்செய்வது அரசாங்கத்தின் முக்கிய எதிர்பார்ப்பு என்றும் அதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கு அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியமானது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# "பாதுகாப்பு வழங்கப்பட்டால் மருத்துவ சேவையை தொடரலாம்"

உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டால் புத்தூர் அரசினர் மத்திய மருந்தகத்தின் சேவைகளை நாளை செவ்வாய்க்கிழமை (02) ஆரம்பிக்க முடியுமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இனந்தெரியாத குழுவொன்று புத்தூர் வைத்தியசாலைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வைத்தியருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தனர். இச்சம்பவத்தையடுத்து வைத்தியசாலையின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், வைத்தியசாலையின் சேவையைத் தொடர்வதற்கு வைத்தியசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என வைத்தியசாலையின் வைத்தியர் கோரியுள்ளார்.

அத்துடன், வைத்தியசாலையில் கண்காணிப்பு கெமரா மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் அதனை வைத்திய சங்கத்தினர் பரிசீலனை செய்து வைத்தியரை தொடர்ந்து பணி செய்வதற்கு அனுமதிக்க முடியும் என தெரிவித்தனர்.

அச்சுறுத்தல் விடுத்தவர்கள் கைதுசெய்யப்பட்ட நிலையில் குறித்த வைத்தியருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த காரணத்தால் தொடர்ந்தும் அவ்வாறான நிலை தோன்றலாம் என வைத்தியர் அச்சமடைந்துள்ளார்.

எனவே வைத்தியர் தனது சேவையை மீண்டும் தொடர்வதற்கு வைத்தியசாலையின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தினால் தொடர்ந்தும் சேவையை மேற்கொள்ள முடியும் என வைத்தியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.04.28
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5100 | ரூ. 15,222,031.00 | B | 7 1 1 8 5 9 |
| கொவிசெத | 3342 | ரூ. 99,360,206.64 | P | 01 18 51 66 |
| ஜாதிக சம்பத | 1555 | ரூ. 10,338,459.60 | தனுசு | 8 6 1 1 8 6 |
| தன நிதானய | 1130 | ரூ. 88,003,725.20 | N | 07 71 73 78 |
| ராசி சுப பலன் Handahana | 409 | ரூ. 2,500,000.00 | மகரம் (விசேட இலக்கினம்: மகரம்) | 04 31 37 56 |
| மெகா பவர் | 1448 | ரூ. 317,813,154.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | Q (சுப்பர் இலக்கம் 02) | 21 31 46 51 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.04.29
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5101 | ரூ. 15,266,921.00 | T | 0 6 3 1 6 2 |
| கொவிசெத | 3343 | ரூ. 99,715,461.84 | R | 16 20 73 76 |
| ஜாதிக சம்பத | 1556 | ரூ. 10,396,306.40 | மிதுனம் | 7 5 0 9 5 3 |
| தன நிதானய | 1131 | ரூ. 88,028,818.40 | R | 01 38 53 72 |
| ராசி சுப பலன் Handahana | 410 | ரூ. 2,581,179.40 | கும்பம் (விசேட இலக்கினம்: கும்பம்) | 22 28 40 54 |
| மெகா பவர் | 1449 | ரூ. 317,942,362.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | W (சுப்பர் இலக்கம் 12) | 12 13 40 77 |

# யாழில் சொந்தமாக காணி வாங்கிய பிக்கு அக்காணிக்குள் விகாரை அமைக்க விண்ணப்பம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் தனியார் காணியொன்றைக் கொள்வனவு செய்துள்ள பௌத்த பிக்கு ஒருவர், அக்காணியினுள் விகாரைனொன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

சுன்னாகம் கந்தரோடை பகுதியில் தமிழ் - பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங் களும் அதன் எச்சங்களும் காணப்படுகின்றன. அவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

தமிழ் - பௌத்த எச்சங்கள் காணப்படும் இடத்திற்கு அருகிலுள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான சுமார் 06 பரப்பு காணியை தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் பணம் கொடுத்து வாங்கியுள்ளார்.

இந்நிலையில், குறித்த காணிக்குள் புதிய விகாரையொன்றை அமைக்கவுள்ளதாகவும், விகாரை அமைக்கவுள்ள காணிக்கு அருகில் தொல்லியல் எச்சங்கள் காணப்படுவதனால், விகாரை அமைப்பதால் அதற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா, அக்காணியில் விகாரை அமைக்கலாமா என தொல்லியல் திணைக்களத்திடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

தொல்லியல் திணைக்களம் விகாரை அமைக்க அனுமதி வழங்கியவுடன், ஏனைய அனுமதிகளை விரைந்து எடுத்து, விகாரை கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க பிக்கு தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழில் விபத்துக்குள்ளாகிய மூதாட்டி உயிரிழப்பு; வைத்தியசாலையில் சேர்க்கும் முன் நகைகள் மாயம்!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் விபத்துக்குள்ளாகிய பெண்மணியின் தங்க ஆபரணங்கள் அபகரிக்கப்பட்டுள்ளதாக அவரது கணவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் (29) சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த கனகநாயகம் உமாதேவி (வயது 72) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்மணி வீட்டிலிருந்து சைக்கிளில் வெளியில் சென்று, மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை உரும்பிராய் பகுதியில் அவருக்குப் பின்னால் வேகமாக வந்த கெப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு அம்பியூலன்ஸுக்கு அறிவித்து, அவரை வைத்தியசாலையில் சேர்க்க முற்பட்ட வேளை, விபத்தை ஏற்படுத்திய கெப் வாகனத்தில் வந்த நபர்கள் தாம், தமது வாகனத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்கிறோம் எனக் கூறி அவரை வாகனத்தில் ஏற்றி, போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் அறிந்து வைத்தியசாலை சென்ற பெண்மணியின் கணவர் உள்ளிட்ட உறவினர்கள் வைத்திய சாலையில் நின்றவேளை பெண்மணி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வேளையே தனது மனைவி அணிந்திருந்த தங்கச் சங்கிலி, மோதிரம் மற்றும் காப்பு என சுமார் 06 பவுண் நகைகளைக் காணவில்லை எனக் கூறியுள்ளார்.

பெண்மணியை வைத்தியசாலையில் சேர்க்கும்போதே அவர் எவ்விதமான நகைகளும் அணிந்திருக்கவில்லை என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்க முதலே, தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுவிட்டதாகவும், வைத்தியசாலையில் சேர்த்தவர்களே நகைகளை அபகரித்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

விபத்துச் சம்பவம் மற்றும் நகைகள் அபகரிப்பு தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, விபத்தை ஏற்படுத்திய கெப் ரக வாகனத்தில் வந்தவர்கள் மது போதையில் இருந்ததாகவும் மிக வேகமாக வந்தே பெண்மணியை மோதி தள்ளியதாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வீதியில் கண்காணிப்பு கெமரா மற்றும் வைத்தியசாலை நுழைவாயிலுக்கு அருகிலுள்ள கண்காணிப்பு கெமராக்களின் வீடியோ பதிவுகள் ஊடாக கெப் வாகனத்தை அடையாளம் கண்டு, கெப் வாகனத்தில் பயணித்தவர்களை கைதுசெய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னடுத்துள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பொலிஸாருக்கு கத்தியைக் காண்பித்து அச்சுறுத்திய இருவர் தப்பியோட்டம்

(யாழ். நிருபர்)

கோப்பாய் பொலிஸாருக்கு வீதியில் வைத்து கிறீஸ் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்திய இருவர் மோட்டார்சைக்கிளை கைவிட்டு தப்பித்துள்ளனர்.

உரும்பிராய் சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பணியில் ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸார், மோட்டார்சைக்கிளில் வந்த இருவரை மறித்து சோதனையிட முற்பட்டனர். அதன்போது பொலிஸாருக்கு கிறீஸ் கத்தியைக் காண்பித்த அவர்கள் மோட்டார்சைக்கிள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைக் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

மோட்டார்சைக்கிள் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை மீட்ட பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளனர்.

இதேவேளை, மோட்டார்சைக்கிளை நீதிமன்றில் பாரப்படுத்தாது வெளியில் எடுப்பதற்கு பல மட்டங்கள் ஊடாக முயற்சிகள் எடுக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியா ஆலயமொன்றில் மின்சாரம் தாக்கி இளைஞர் பலி



(வவுனியா நிருபர்)

வவுனியா, எல்லப்பர் மருதங்குளம் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆலயத்தில் இடம்பெறும் உற்சவ பூஜைக்கு கடந்த வெள்ளிக்கிழமை (28) இரவு ஆலயத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தபோது ஆலயத்தின் கதவினுள் இருந்த வயரில் மின்சார ஒழுக்கு காணப்பட்ட இடத்தில் இளைஞரின் கை பட்டதால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் நா.கபிலன் (வயது 29) என்ற இளைஞரே உயிரிழந் தவராவார். சம்பவ இடத்திற்கு சென்ற சிதம்பரபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராமின் 18ஆம் ஆண்டு நினைவு தினமும், ரஜீவர்மனின் 16ஆம் ஆண்டு நினைவு தினமும் யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (29) சனிக்கிழமை மாலை இடம்பெற்றது. (யாழ். நிருபர்)





ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றபோது ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு சிவராமின் படத்துக்கு மெழுவர்த்தி ஏத்தியும், மலர்தூவியும் அஞ்சலி செலுத்தினர். (வவுனியா நிருபர்)

# தொழிலாளர் உரிமைக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்போம்

## இ.தொ.கா. தலைவர் செந்தில் மே தின வாழ்த்து



உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் உலகமே மகிழ்ச்சியாக இருக்கும். உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்ததன் அடையாளமாக பிரகடனப்படுத்தப்பட்ட மே தினத்தைக் கொண்டாடும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள் - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகின் பல்வேறு நாடுகளில் பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமைகள் மற்றும் வெற்றியை கொண்டாடும் முகமாக மே மாதம் முதலாம் திகதியை உலகத் தொழிலாளர்கள் நாளாக கொண்டாடுகிறோம்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள்தான். பாட்டாளி வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் நாடு வளர்ச்சியடையும். இலங்கையில் பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

காலனித்துவ ஆட்சிக்காலம்முதல் சுதந்திர இலங்கையிலும் கூட கடுமையான போராட்டங்கள் ஊடாகவே தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்ததுடன், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களும் பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்டன.

இலங்கை - இந்திய காங்கிரஸ் உருவாக்கத்தின் பின்னர் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக உருவானமை தொழிலாளர் நலன்சார் நீட்ச்சியின் அடிப்படையில்தான். குடியுரிமையற்று இருந்த பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க இ.தொ.கா. போராட்டங்களை வரலாறு முழுவதும் செய்துள்ளது.

அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் அடிப்படையாகக்கொண்டே அனைத்து சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டுள்ளனர். அதே வழியில் இ.தொ.கா. தொடர்ந்தும் பயணம் செய்யும். தொழிலாளர்களுக்காக எமது தொழிற்சங்க ரீதியான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

தொழிலாளர்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கும் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்க வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கபடுவதை உறுதி செய்யும் அதேவேளை, அவர்களின் வாழ்வாதார உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் - என்றும் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# அடுத்த வருட மே தினத்தில் மாற்றத்தை உருவாக்குவோம்

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மே தின வாழ்த்து



நாட்டின் தேசிய வருமானத்தின் பங்காளிகளான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் சமகால பொருளாதார நெருக்கடிக்கு ஈடுகொடுக்கும் வகையில் மேம்படுத்தப்பட வேண்டுமென்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்துகள் இருக்க முடியாது. அதனையே நாமும் வலியுறுத்தி நிற்கிறோம். அடுத்து வரும் மே தினமானது மலையகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கவேண்டும் - என்று கல்வி இராஜாங்க அமைச்சரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள மே தினச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையகத்தைப் பூர்வீகமாகக்கொண்டுள்ள பெருந் தோட்டத் தொழிலாளர்கள் இந்திய வம்சாவளியினராக அறியப்படுகின்றனர்.

இந்திய வம்சாவளியினர் என்ற பெயரோடு அவர்கள் இலங்கைத் திருநாட்டுக்கு பெருவாரியான வருமானத்தை ஈட்டிக்கொடுத்து வருகின்றனர். கடந்த 200 வருட காலமாக எமது நாட்டின் தேசிய வருமானத்தில் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கிவரும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் பல்வேறு குறைபாடுகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

இத்தகைய கவலைகள், இன்னல்கள், மற்றும் முட்டுக்கட்டைகளிலிருந்து மலையக சமூகம் விடுபட வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

சமகால பொருளாதார நெருக்கடியானது மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் கணிசமான பாதிப்பை அல்லது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இருந்தபோதிலும் அவர்கள் தொடர்ச்சியாகவும் நாட்டுக்காக உழைத்து வருகின்றனர்.

ஆகவே, நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஏற்ற வகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை இந்த மே தினம் உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# செங்கொடி சங்கத்தின் மே தினம் மஸ்கெலியாவில்

(மஸ்கெலியா செய்தியாளர்)

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு செங்கொடி சங்கத் தலைவர் செல்லையா சிவசுந்தரத்தின் தலைமையில் விசேட கூட்டத்தை மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள புரவுன்ஸ்விக் தோட்ட புது தோட்டப் பிரிவிலுள்ள முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நடத்த ஏற்பாடுசெய்துள்ளனர்.

இந்நிகழ்வில் செங்கொடி சங்க உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

# உலக முடிவு பகுதியில் குடைசாய்ந்து பஸ் விபத்து

(ஆ.ரமேஸ்)



நுவரெலியா மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்து நானுஓயா - பட்டிபொல வீதி வழியாக ஹோர்ட்டன் உலக முடிவு பகுதிக்கு வாகனத்தில் பயணிக்கும் பயணிகள் மாற்றுவழியை பயன்படுத்துமாறு நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பகுதியிலிருந்து பிலக்வூல் சந்தி ஊடாக உலக முடிவு பகுதிக்கு உல்லாசப் பயணிகளாக சென்ற தனியார் பஸ் நேற்றுமுன்தினம் (29) மாலை வீதியில் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த பஸ்ஸை செலுத்திய சாரதி காயங்களுக்குள்ளாகியதுடன், பஸ்ஸில் பயணித்த எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் வீதியில் ஏனைய வாகனங்கள் பயணிக்க முடியாது குறித்த பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது. ஆகையால் வீதி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, விபத்துக்குள்ளான பஸ்ஸை அகற்றும் வரை இந்த வீதி ஊடாக உலக முடிவை பார்க்க பயணிக்கும் பயணிகள் மாற்றுவழியாக ஓய்யா பகுதியிலிருந்து உலக முடிவுக்கு வரும் பிரதான வழியை பயன்படுத்துமாறு பொலிஸார் பயணிகளுக்கு அறிவித்துள்ளனர்.

# தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் மே தினக் கூட்டம் நுவரெலியாவில்

(ஆ.ரமேஸ்)

தோட்டத் தொழிலாளர்களின் உழைப்புக் கேற்ற ஊதியம் மற்றும் மலையக இந்திய வம்சாவளி மக்களின் 200 வருட வரலாற்றுச் சிறப்பு ஆகியவற்றை முன்வைத்து இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி இம்முறை உலக தொழிலாளர் தினமான மே தினத்தை நுவரெலியாவில் நடத்த தீர்மானித்துள்ளது.

மலையக தோட்டத் தொழிலாளர்களை வழிநடத்தும் தொழிற்சங்கங்கள் பல இம்முறை உழைப்பாளர் தினத்தை தோட்டவாரியாக நடத்தத் தீர்மானித்துள்ளன.

இந்நிலையில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி, தொழிலாளர்களுக்கான உரிமைகள் தொடர்பில் முக்கிய கோரிக்கைகளை மே தின கோரிக்கையாக முன்வைத்து நுவரெலியா நகரில் அதன் மே தின நிகழ்வை கொண்டாட உள்ளதாக முன்னணியின் பொதுச் செயலாள ரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்தார்.

# மாணிக்கக்கல் தோண்டிய அறுவர் ஹட்டனில் கைது

(எஸ்.கணேசன்)

ஹட்டன் ஊடாக மகாவலி ஆற்றுக்கு நீரேந்தும் ஹட்டன்ஓயாவை அண்மித்த காட்டுப்பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக மாணிக்கக்கற்களை தோண்டி சுற்றாடலை மாசுபடுத்திய சந்தேகத்தின் பேரில் சந்தேகநபர்கள் ஆறுபேர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.என்.தெஹிகமவின் ஆலோசனையின்பேரில்,ஸ்டெதன் தோட்டத்திற்கு அருகில் ஹட்டன்ஓயாவை அண்மித்த காட்டுப்பகுதியில் மாணிக்கக்கற்களை தோண்டிய சந்தேக நபர்களை சுற்றிவளைத்ததுடன், அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியதாக தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் அதே தோட்டத்தில் வசிப்பவர்கள் எனவும், சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கை வரலாற்றை ஆய்வுசெய்ய புதிய நிறுவனம் விரைவில் நிறுவப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்வதற்காக புதிய நிறுவனமொன்று விரைவில் ஸ்தாபிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற றோயல் ஆசிய சங்கத்தின் 178ஆவது கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றோயல் ஆசிய சங்கத்தின் சில வெளியீடுகளின் மூலப்பிரதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதன்போது கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள றோயல் ஆசிய சங்கம் மற்றும் கல்கத்தா கிளை ஆகியவை இந்த துணைக்கண்டத்தின் வரலாற்றைப் பதிவு செய்வதில் பெறுமதிமிக்க சேவையை ஆற்றியுள்ளன. பிரதம நீதியரசர் அலெக்சாண்டர் ஜோன்சன், ஜோர்ஜ் டர்னர் மற்றும் கல்கத்தாவில் மிகவும் பிரபலமான வின்சென்ட் போன்றோர் நமது வரலாற்றை மட்டுமல்ல, இந்தியாவின் வரலாற்றையும் ஆராய்வதில் மிகச் சிறந்த பணியைச் செய்தார்கள் என்று நினைக்கிறேன்.

நாம் பதிவுசெய்துள்ள வரலாறு இந்தியாவுக்கு இல்லை. நமது மகாவம்சத்தைப்போலவே அரசியல் விமர்சகர்களும் எழுதப்படாத வரலாற்றை ஆராய்ந்தே இந்திய வரலாற்றை விளக்குகிறார்கள். இருப்பினும், வரலாற்றுக்கு ஒரு பாரம்பரியம் உள்ளது. அந்த வரலாற்றை நாம் தொடர வேண்டும். இது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. மேலும், அந்த வரலாற்றைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். வரலாற்றை ஆராய்வதன் மூலம் வருங்கால



வரலாற்றைப் பாதுகாக்கும் றோயல் ஆசிய சங்கத்தின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டிய பணியாகும். றோயல் ஆசிய சங்கத்தின் சில சஞ்சிகைகளின் மூலப் பிரதிகளைப் படித்திருக்கிறேன்.

இலங்கையின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான ஜேம்ஸ் டி அல்விஸ் மற்றும் இராமநாதன், அருணாச்சலம் போன்ற சிறந்த மனிதர்களின் புகைப்படங்களும் ஏராளமாக இங்கு உள்ளன. இது உண்மையிலேயே மிகச் சிறப்பான செயல்.

எனவே, நான் முதலில் செய்ய விரும்புவது வரலாற்றுக்கான ஒரு கல்வி நிறுவனத்தைத் தொடங்குவதுதான். எனது பதவிக்காலம் முடிவதற்குள் இது குறித்து கலந்துரையாடி முடிவு எடுக்கவேண்டும். அதற்காக பல்கலைக்கழகங்கள், தொல்பொருள் திணைக்களம் மற்றும் றோயல் ஆசிய சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாட வேண்டிய இறுதி வரைவை நாங்கள் தயாரித்து வருகிறோம். எதிர்காலத்தில் இந்தத் துறையின் பணிகளுக்கு நிதி மற்றும் அரசாங்க ஆதரவை நாங்கள் வரலாற்று நிறுவனம் மூலம் வழங்குவோம்.

முதலில் நூலகங்களின் நிலையை ஆராய்ந்து பாதுகாக்கவேண்டும். றோயல் ஆசிய சங்கத்தின் நூலகங்களையும் அவதானிக்க வேண்டும். அருங்காட்சியகம் மற்றும் தேசிய ஆவணக் காப்பகம் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். பொது நூலகத்திலுள்ள ஆவணங்கள் பற்றி அறிந்துகொள்வது அவசியம். ஏனென்றால், எனது தாத்தா, பெர்கியுசனின் எழுத்துகளின் தொகுப்பொன்றை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு வழங்கினார்.

ஒபேசேகரர்கள், பல்கலைக்கழகங் களுக்கு மற்றுமொரு தொகுப்பை வழங்கி யுள்ளனர். இவை அனைத்தையும் ஒன்றுசேர்க்க வேண்டும். மேலும், பல பல்கலைக்கழகங்களில் வெளியிடப்படாத ஆய்வறிக்கைகள் உள்ளன. அவை அனைத்தையும் நாம் சேர்க்கவேண்டும். இதுபோன்ற பல வரலாற்று நிகழ்ச்சிகளை நாங்கள் செய்யவேண்டியுள்ளது. இதற்கு முதலீட்டுத் திட்டங்கள் தேவை என்று நான் நினைக்கிறேன். பல்கலைக்கழகமாக இருந்தாலும் சரி றோயல் ஆசிய சங்கமாக இருந்தாலும் சரி எந்தத் திட்டத்தை முன்னெடுப்பது என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நிதி வழங்குவது குறித்து சட்டவரைவை தயாரிக்க வழங்கப்பட்டுள்ளது. இறுதி வரைவு கிடைத்த பின் சட்டரீதியாக அதனை கலந்துரையாடி குழுவொன்றை நியமிப்போம். இந்தக் குழு மூலம் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் குறித்து முடிவுகளை எடுக்க முடியும். இந்த முடிவின் ஊடாக பலரை வரலாற்றை கற்க வைக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்.

தற்போது பலர் வரலாறு கற்பதில்லை. இப்போது வரலாறு வேறுபட்டது. வெவ்வேறு பதிப்புகள் உள்ளன. வரலாறு தமக்கான போக்கில் சென்றிருப்பது எல்லாவற்றையும் விட மோசமானது. எனவே, நாம் அவர்களை மீண்டும் சரியான பாதையில் கொண்டுவந்து வரலாற்றுக்கு முன்னுரிமை வழங்கி செயல்படுத்த வேண்டும்.

இது தொடர்பாக நிறைய வேலைகள் செய்ய வேண்டியுள்ளன. உங்கள் நூலகத்தின் முக்கிய குறைபாடான குளிரூட்டியை சீர்செய்ய வேண்டியது அவசியம். அதற்குத் தேவையான பணத்தை அரசாங்கம் வழங்கும். அதன்பிறகு கடந்த ஆண்டுகளில் கொவிட் தொற்றுநோயால் நிறுத்தப்பட்ட கருத்தரங்குகளைத் தொடருங்கள்.

நூலகங்கள் என்று வரும்போது நிச்சயமாக புத்தகங்களைப் பாதுகாக்க பணம் வழங்கப்படும். அதன்பிறகு எங்கள் நிதியை வரலாற்று நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு பயன்படுத்துவோம். அது உங்கள் நிறுவனத்துடன் போட்டியிடும் ஒரு நிறுவனம் அல்ல. அந்த நிறுவனம் தேசிய அருங்காட்சியகம், தேசிய ஆவணக் காப்பகம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் கலாசார முக்கோணம், பல்கலைக்கழகங்கள் மற்றும் றோயல் ஆசிய சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும்.

இந்த அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு மையத்தின் மூலம் நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பு மூலம் இந்தத் துறை தொடர்பான அறிவை மேலும் செழுமைப்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையின் வரலாறு பற்றி மாத்திரமல்ல, கலாசாரத்திலும் கவனம் செலுத்தவேண்டும். வரலாறு மற்றும் கலாசாரத்தை எவ்வாறு ஆய்வு செய்வது, அந்த விடயங்களுடன் தொடர்புடைய கடந்த காலம் எங்குள்ளது என்பதை இங்கு கண்டறிய முடியும்.

இந்த துணைக்கண்டத்தின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு பிரச்சினையான தகவலையும் ஆராய்ந்து தீர்க்கும் ஆற்றலை இது ஏற்படுத்தும். இந்த செயற்பாடுகளை மேலும் நடைமுறைப்படுத்துவதில் தடைகள் இருப்பின், பௌத்த விவகார அமைச்சு உங்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கும் - என்றார்.

# சுற்றுலா சென்று திரும்பும்வேளை விபத்துக்குள்ளான இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

நண்பர்களுடன் சுற்றுலா சென்று திரும்பும்வேளை விபத்தில் சிக்கி படுகாயங்களுடன் சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி, புலோலி சாரையாடி பகுதியைச் சேர்ந்த தனியார் வங்கி ஊழியரான சுந்தரமூர்த்தி சத்யன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி தனது நண்பர்களுடன் மோட்டார்சைக்கிளில் சுற்றுலா சென்றுவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தவேளை கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் ஹயஸ் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்தில் காயமடைந்தவரை கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில், 24ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (28) இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.









இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய மதுர கீதங்கள் இசை நிகழ்ச்சி ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவு ஆலோசகர் ஏ.மகேந்திரனின் நெறியாள்கையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனரஞ்சக பாடகர், எழுத்தாளர் கலைக்கமல் உட்பட பலர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள்: மொஹமட் நசார்)

# மக்களால் இன்றும் நேசிக்கப்படும்... (4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளை உள்ளடக்கிய ஐக்கிய முன்னணி அப்போது பாராளுமன்றத்தில் 157 ஆசனங்களில் 116 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சியின் பெறுபேறு 17 ஆசனங்களாகக் குறைந்தது. இத்தேர்தலில் பிரேமதாச 69,310 வாக்குகளைப் பெற்று மத்திய கொழும்பில் முதலாம் இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். பழீல் கபூர் மற்றும் பீட்டர் கெனமன் ஆகியோர் முறையே 63,623 மற்றும் 58,557 வாக்குகளைப் பெற்று இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

முன்னாள் பிரதமரும் கட்சித் தலைவருமான டட்லி சேனநாயக்க, உடல்நலக்குறைவு காரணமாக அவருக்குப் பதிலாக ஜே.ஆர்.ஜயவர்தனவை எதிர்க்கட்சித் தலைவராக்கினார். எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாக ரணசிங்க பிரேமதாச நியமிக்கப்பட்டார். ஜே.ஆர். மற்றும் பிரேமதாச இருவரும் ஒருவரையொருவர் சாராமல் கட்சிக்குப் பிரகாசமான எதிர்காலம் கிடைக்க வேண்டுமானால் ஐ.தே.க. புதுப்பிக்கப்பட வேண்டும் - மறுகட்டமைக்கப்பட வேண்டும் - மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று உணர்ந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் டட்லி சேனநாயக்க மாற்றங்களைச் செய்யவோ அல்லது மாற்றங்களுக்கு இடமளிக்கவோ விரும்பவில்லை.

1973 ஏப்ரல் 10 அன்று, டட்லிக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவர் வெளித்தோற்றத்தில் குணமடைந்தவராக தோன்றினாலும், மூன்று நாட்களுக்குப் பின்னர் டட்லி சேனநாயக்க சிங்கள - தமிழ்ப் பாரம்பரிய புத்தாண்டு தினமான ஏப்ரல் 13 அன்று காலமானார்.

டட்லி சேனநாயக்காவின் மரணம், இலங்கை மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. டட்லியின் மீது தனித்துவமான அனுதாபமும் பாசமும் மக்கள் மத்தியில் பெருகியது. இந்த உணர்வுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியல் ரீதியிலான அலையாக மாறியது. தலைசிறந்த இராஜதந்திரவாதியான ஜே.ஆர்., மக்கள் மனநிலையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை ஆக்கபூர்வமாக மாற்றி, அடுத்த தேர்தலில் ஐ.தே.கவை வெற்றிபெறும் கட்சியாக மாற்ற விரும்பினார். இதற்காக கட்சியை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தார். தனது வரம்புகளை அறிந்திருந்த ஜே.ஆர்., இந்த மாற்றத்திற்குத் தேவையான பொதுவான ஜனரஞ்சகம் தன்னிடம் இல்லை என்பதை அறிந்திருந்தார். இந்தப் பணிக்கு மக்கள் அபிமான பிரேமதாச அவசியம் என்பதை உணர்ந்தார். எனவே, அவர் பிரேமதாசவை தனியாகச் சந்திப்பதற்கு அழைத்தார்.

ஒரு வெளிப்படையான கலந்துரையாடலில் ஜே.ஆர்., பிரேமதாசவிடம், ஐ.தே.கவைப் பரந்து விரிந்து சாமானியர்களின் கட்சியாக மாற்றும் பிரேமதாசவின் விருப்பத்துடன் தான் உடன்படுவதாக கூறினார். இதில் தன்னுடன் கைகோர்க்குமாறு பிரேமதாசவிடம் கோரிக்கை விடுத்தார். பிரேமதாச, ஜே.ஆரின் உண்மையான அழைப்பை ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு ஜே.ஆர். - பிரேமதாச கூட்டு கட்சியை மறுசீரமைப்பதற்கு கடுமையாக பாடுபட்டது. முதலில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றுதான் உறுப்பினர் சேர்ப்பைத் தொடங்குவதாகும். உறுப்பினர் கட்டணம் வருடத்திற்கு ஒரு ரூபாவாக அமைந்திருந்தது. பரந்த மட்டத்தில் கட்சி அங்கத்துவக் கட்டமைப்பு விஸ்தரிக்கப்பட்டது.

பல்வேறு பொருளாதார மற்றும் சமூகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டனர். மெல்ல மெல்ல ஐ.தே.கட்சி மக்களின் கட்சியாக மாறியது. இடைத்தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து வெற்றிபெறத் தொடங்கியது. பொதுத் தேர்தல்கள் நெருங்கி வருவதால்,1976 டிசம்பரில் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் பட்டியல் நிறைவுசெய்யப்பட்டது.

ஜே.ஆர். ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவராக இருந்தாலும் இரண்டாவது தலைவராக யார் இருக்க வேண்டும் என்ற கருத்து கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் எழுந்தது. பிரேமதாச பிரதித் தலைவராக இருந்து கட்சிக்காக உழைத்தபோதிலும், அவர் முறையாக பதவியில் அமர்த்தப்படவில்லை.

பிரதித் தலைவர் பதவிக்கு ஏற்பட்டுள்ள மோதல், தேர்தல் நெருங்கும் நேரத்தில் கட்சியில் பிளவை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் நிலவியது. ஜே.ஆர். ஓர் உட்கட்சி போட்டியை ஏற்பாடு செய்து இதை தீர்த்தார். 29 ஜனவரி 1977 அன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து ஐ.தே.கட்சி வேட்பாளர்களையும் ஜே.ஆர். வரவழைத்து,10 பேர் கொண்ட கட்சித் தலைமைக் குழுவைத் தேர்தல்களுக்காகத் தங்களுக்குள் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறினார்.

ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமான 10 நபர்களுக்கு வாக்களிக்க வேண்டும். தமிழருக்கு ஒரு வாக்கும் முஸ்லிமுக்கு இன்னொரு வாக்கும் போடுவது கட்டாயமாக்கப்பட்டது. இந்த நடவடிக்கை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதோடு, யாருக்கும் பரிந்துரை செய்யவோ அல்லது கலந்துரையாடல் செய்யவோ பேரம் பேசவோ இடமோ நேரமோ வாய்க்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் தஹாம் விமலசேன மற்றும் உதவிச் செயலாளர் ஏ.பி. தலகுனே ஆகியோரின் வாக்கெடுப்பின் பிரகாரம் 10 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களின் பெயர்கள் மற்றும் பெறப்பட்ட வாக்குகள் வெளியிடப்பட்டன.ஆர். பிரேமதாச 118 வாக்குகளைப் பெற்று முதலாம் இடத்திற்கு தெரிவானார். (2. காமினி திசாநாயக்க – 108, 3.ஏ.சி.எஸ். ஹமீத் – 93, 4.கி.வே. தேவநாயகம் – 74, 5.காமினி ஜயசூரிய – 73, 6.ரோனி டி மெல் – 65, 7.ஈ.எல். சேனநாயக்க – 65, 8.லலித் அத்துலத்முதலி – 62, 9.சிறில் மேத்யூ, -41, 10.ஈ.எல்.பி. ஹுருல்லே - 38)

பட்டியலில் முதலிடம் பெற்ற ரணசிங்க பிரேமதாச குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். தேவைப்படும்போது பிரேமதாச கட்சிக் கூட்டங்களில் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்துவார் என்றும் ஜே.ஆர். தெளிவுபடுத்தினார்.

### வரலாறு காணாத வெற்றி

ஐ.தே.கட்சி 1977 ஜூலையில் பாராளுமன்றத்தில் 168 ஆசனங்களில் 141 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாறு காணாத வெற்றியை ஈட்டியது. பிரேமதாச 94,128 வாக்குகளைப் பெற்று மத்திய கொழும்பில் முதலாவது இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். ஜே.ஆர்.ஜயவர்தன பிரதமரானார். பிரேமதாச உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். சபை முதல்வராகவும் ஆக்கப்பட்டார்.

குடியரசு அரசியலமைப்பின் இரண்டாவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஜே.ஆர்.ஜயவர்தன 1978இல் ஜனாதிபதியானார். பிரேமதாச பிரதமரானார். 1978 முதல் 1988 வரை பிரதமராக அவர் பதவி வகித்தார். ரணசிங்க பிரேமதாச இலங்கையின் பிரதமரான கொவிகம அல்லாத இனத்தைச் சேர்ந்த முதல் மற்றும் ஒரே ஒரு உறுப்பினர் ஆவார்.

சில அழுத்தங்கள் இருந்தபோதிலும், ஜனாதிபதி ஜயவர்தனவிற்கும் பிரதமர் பிரேமதாசவிற்கும் இடையிலான உறவு ஆக்கபூர்வமானது என்பது நிரூபிக்கப்பட்டது. தமது எதிர்கால அபிலாஷைகள் எதுவாக இருந்தாலும், பிரேமதாச ஜே.ஆரின் கீழ் விசுவாசமாக பணியாற்றியதோடு, ஐ.தே.க. தலைவருக்கு எதிராக எந்தவொரு சதித்திட்டத்திலும் அல்லது சூழ்ச்சியிலும் ஈடுபடவில்லை. பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஆறு வருடங்கள் நீடிப்பதற்கான வாக்கெடுப்பு உட்பட ஜே.ஆரின் அரசியல் உபாயங்களையும் அவர் ஆதரித்தார்.

ரணசிங்க பிரேமதாச, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத் முதலி மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான்கு முக்கிய சாத்தியமான போட்டியாளர்கள் இருந்தனர். ஜனாதிபதித் தேர்தலுக்கு முழு நாடுமே ஒரு பெரிய 'தொகுதியாக' இருக்கப் போவதால், வேட்பாளர்கள் புதுமையான திட்டங்களின் மூலம் நாடளாவிய ரீதியில் அரசியல் அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தினர்.

பிரேமதாச 'கம் உதாவ' என்ற திட்டத்தையும் காமினி திசாநாயக்க 'ஸ்வர்ண பூமி' என்ற திட்டத்தையும் அதுலத்முதலி 'மஹபொல' என்ற திட்டத்தையும் ரணில் விக்கிரமசிங்க 'யொவுன்புர' என்ற திட்டத்தையும் கொண்டிருந்தனர். பிரேமதாச தனது நெருங்கிய போட்டியாளர்களாக அத்துலத் முதலி மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோரை விடவும் முன்னணியில் இருந்தார் என்பது விரைவில் வெளிப்பட்டது.

இலங்கையில் இந்தியாவின் தலையீடு மற்றும் ஜே.ஆர்.ஜயவர்த்தன மற்றும் ராஜீவ் காந்தி ஆகியோர் 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமை நாட்டில் ஒரு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது.

காமினி திசாநாயக்கவும் ஓரளவுக்கு ரணில் விக்கிரமசிங்கவும் ஜே.ஆரை ஆதரித்தபோதும், பிரேமதாசவும் அதுலத்முதலியும் இதனை எதிர்த்தனர். பிரேமதாச கட்சி ஒழுக்காற்று, கட்டுக்கோப்பு காரணமாக 13 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் ஆதரித்து பிரேரணைகளை முன்வைத்த போதிலும், இலங்கையில் இந்திய இராணுவம் இருப்பதையும் மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்படுவதையும் எதிர்த்தார். இதற்கிடையில், வடக்கு மற்றும் கிழக்கில் விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்துடன் மோதியபோது ஜே.வி.பி. கிளர்ச்சி தெற்கில் தீவிரமடைந்தது.

இந்நிலையில்தான் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டது. புது டில்லி உயர்ஸ்தானிகர் ஜே.என்.டிக்ஸித் பிரேமதாசவை எதிர்கால ஜனாதிபதியாக வரவேற்க முடியாது என்று ஜே.ஆரிடம் தெரிவித்தார். காமினியும், லலித்தும் வேட்பாளராக தாங்கள் உரிமையை கோரிக் கொண்டே இருந்தனர்.

இந்தியத் தலையீட்டிற்கு எதிரான அவரது விரோத நிலைப்பாட்டிற்காக ஜே.ஆர்., பிரேமதாசாவிடம் அதிருப்தியடைந்தார்.ஒரு கட்டத்தில், ஜே.ஆர். அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து மூன்றாவது முறையாகமீண்டும் தேர்தலில் போட்டியிட நினைத்தார். பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஐ.தே.கவின் உயர்மட்டத்தில் அதிருப்தியும் நிலவி வந்தது.

ஆனால், வெறுப்புடன் அதை சகித்துக் கொண்டார். பிரேமதாச தன் மீதான விரோதம் மற்றும் வெறுப்பின் ஆழத்தை உணர்ந்தார். ஜே.ஆர். மீண்டும் போட்டியிடலாம் அல்லது காமினி திசாநாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கலாம் என்று அவர் சந்தேகிக்கத் தொடங்கினார். எனவே, பிரேமதாச தமக்கு வேட்பாளராக நியமனம் மறுக்கப்படும் பட்சத்தில் தனது ஆதரவாளர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சுயேச்சையாக போட்டியிட அமைதியாக தயாராகிவிட்டார்.

இது ஒரு துணிச்சலான விடயமாக இருந்தாலும், ஐ.தே.க துண்டாடுதல், வாக்குகளைப் பிரித்து ஸ்ரீல.சு.க வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு உதவும் என்றும் அவர் அறிந்திருந்தார். இருப்பினும், அவருக்கு வேறு வழியில்லை என்று உணர்ந்ததால் அவர் அதற்குத் தயாராக இருந்தார். அதிர்ஷ்டவசமாக, சம்பந்தப்பட்ட அத்தகைய நிகழ்வு ஏற்படவில்லை. மூன்றாவது தடவையாகவும் போட்டியிடும் தீவிர நடவடிக்கையில் ஜே.ஆர். செயற்பட்டு வந்தார்.

அவருக்கு 82 வயது நெருங்கியதும் அவருடைய மனைவி எலினா, ஜே.ஆர். அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். ஜே.ஆரும் அவ்வாறே விரும்பினார். ஜூலை 1988இல்,ஜே.ஆர். மீண்டும் போட்டியிடப் போவதில்லை என்பது நெருங்கிய நம்பிக்கையாளர்களிடையே அறியப்பட்டது. ஆனால் ஸ்ரீல.சு.க. ஊகிக்க, ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தெரியப்படுத்தாது வைத்திருக்கும் ஒரு தந்திரோபாய நடவடிக்கையில் ஈடுபட்டு ஜே.ஆர். தான் மீண்டும் போட்டியிடுவாரோ என கேள்வியை திறந்தே திறந்துவிட்டிருந்தார்.

ஆனால், பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்வதே முக்கியமான விடயமாக காணப்பட்டது. ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதி வேட்பாளராக இருந்தால் மாத்திரமே ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு ஓரளவேனும் கிட்டும் என்பதை பகுப்பாய்வுகள் மூலம் தவிசாளர் ரஞ்சன் விஜேரத்ன உணர்ந்தார். வேறெந்த வேட்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் தோல்வியடைவார்கள் என்பதைக் கணித்தார். பிரேமதாச கட்சியில் இருந்து பிரிந்து தனித்து போட்டியிட்டால், ஐ.தே.க. மூன்றில் ஒரு பங்கை இழக்க நேரிடும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணசிங்க பிரேமதாசவே தெரிவானார்.

ரஞ்சன் விஜேரத்னவின் இந்த யதார்த்தமான மதிப்பீட்டின் பின்னர், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் இல்லாது, கட்சியின் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு ஜே.ஆரும் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டார். பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த முடிவு செய்தார். லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோரையும் அழைத்து தனது முடிவை ஜே.ஆர் தெரிவித்தார். பிரேமதாசாவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளிக்குமாறு அவர் அவர்களை அழைத்து வேண்டிக்கொண்டார்.

விஜேரத்னவினால் இது உத்தியோகப்பூர்வமற்ற முறையில் பிரேமதாசவுக்கு தெரிவிக்கப்பட்டபோது, அவர் பிரிந்து தனித்து போட்டியிடும் திட்டத்தை கைவிட்டார். 1988 செப்டெம்பரில் தான் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாக ஜே.ஆர் முறைப்படி அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பாராளுமன்றக் குழுவும் செயற்குழுவும் கூட்டப்பட்டு வேட்பாளரை முடிவு செய்வதற்கான உட்கட்சித் தேர்தலுக்குப் பதிலாக,ஜே.ஆர்., ரணசிங்க பிரேமதாசவின் பெயரை ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழிந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். மேலும், ஒரு திருப்பமாக, பிரேமதாசவின் பிரதான போட்டியாளர்களான லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோரின் வழிமொழிவை கூட்டாக ஜே.ஆர். பெற்றுக்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணசிங்க பிரேமதாச இவ்வாறு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கட்சி அரசியலில் சுயநலத் தலைமை இருப்பிற்கு பகரமாக மக்கள் அபிமானம் கொண்ட, மக்கள் மத்தியில் இருந்து இயல்பான தலைமைத்துவ ஆற்றல் வாய்ந்தவர்களுக்கு ஜனநாயக ரீதியாக உரிய இடம் வழங்கி, கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் முதிர்ச்சியான அரசியல் பக்குவம் ஜே.ஆரிடம் காணப்பட்டது.

வேட்புமனு தாக்கல் 10 நவம்பர் 1988 அன்று முடிவடைந்தது. ஜனாதிபதி தேர்தல் 19 டிசம்பர் 1988 அன்று நடைபெற்றது. கடும் போட்டியின் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணசிங்க பிரேமதாச 2,569,199 (50.43%) வாக்குகளைப் பெற்று முதலிடம் பிடித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிறிமாவோ பண்டாரநாயக்க 2,289,860 (44.95%) வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தார். SLMP இன் ஒஸ்ஸி அபேகுணசேகர 235,719 (4.63%) வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தார். இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாச இதன் மூலம் தெரிவுசெய்யப்பட்டார்.

பிரேமதாச இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்கும் போது அவருக்கு வயது 65 ஆகும். நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தீவிர அரசியலுக்குப் பிறகு, அவர் மிகப்பெரிய சவால்களை எதிர்த்துப் போராடி ஜனநாயக ரீதியிலான ஏற்பாடுகளில் முயற்சி மற்றும் அரசியல் தந்துணிவால் உச்சத்தை அடைந்தார். அவர் இலங்கைக்கான நேர்மறையான பார்வையுடன் ஒரு பணியில் அர்ப்பணிப்புள்ள மனிதராக செயற்பட்டதுடன், தனக்கான இலக்குடன் செயற்பட்டார். ஆயினும், அவரால் நான்கு வருடங்கள் நான்கு மாதங்கள் மட்டுமே ஜனாதிபதியாக தனது கடமைகளை நிறைவேற்ற முடிந்தது.

இன்று போல் ஓர் தினத்தில் கட்சியின் மே தின ஊர்வலத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது ரணசிங்க பிரேமதாச 1993ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி பிற்பகல் 12.45 மணியளவில் கொழும்பு கிராண்ட்பாஸ், ஆமர் வீதி சந்தியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். அவரோடு மேலும் 17 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் 38 பேர் காயமடைந்தனர்.

கொலையாளி விடுதலைப்புலிகள இயக்கத்தின் தற்கொலை குண்டுதாரியான குலவீரசிங்கம் வீரகுமார் என்ற 'பாபு' ஆவார். ரணசிங்க பிரேமதாசவுக்குப் பிறகு அப்போதைய பிரதமர் டிங்கிரி பண்டா விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

எப்போதும் ஏழைகளின் தோழனாகத் திகழ்ந்த காரணத்தினால் மக்கள் இன்றும் ரணசிங்க பிரேமதாசவை நினைவுகூர்கின்றனர்.

**ஏ.ஜீ.நளீர் அஹமட்**
**ஊடகப் பிரதானி (தமிழ்)**
**எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்**
**இலங்கை பாராளுமன்றம்.**

# கல்முனை பொலிஸ் நிலையத்தில் சித்திரைப் புதுவருட விளையாட்டு விழா





(பாறுக் ஷிஹான், நாவிதன்வெளி செய்தியாளர்)

கல்முனை மற்றும் பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்துள்ள தமிழ், சிங்கள சித்திரை புதுவருட கொண்டாட்டம் கல்முனை மற்றும் பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை(28) காலை இடம்பெற்றது.

இதன்போது மரதன் ஓட்டம், மாவுக்குள் காசு எடுத்தல், தேசிக்காய் ஓட்டம், முட்டி உடைத்தல், சாக்கு ஓட்டம், பலூன் உடைத்தல் உட்பட பல்வேறு கலாசார விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

குறித்த சித்திரை புதுவருட கொண்டாட்டமானது பொலிஸ் நிலைய திறந்த வெளியரங்கில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் தலைமையில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் நெறிப்படுத்தலில் சிறப்பாக இடம்பெற்றது.

இதேவேளை, அன்றையதினம் மாலை பொலிஸ் நிலைய திறந்த வெளியரங்கில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

மேலும், இவ்விரு பொலிஸ் நிலைய தமிழ், சிங்கள புதுவருட கொண்டாட்டமானது பொலிஸ் நிலைய ஆலோசனை குழு மற்றும் சமூக பொலிஸ் சேவை குழுக்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்கவுக்கு விசேடமாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய ஆலோசனைக் குழு பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவு சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது அதிதிகளாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக, பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கண் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களின் பாவனைக்காக திருகோணமலை நகர உதவும் கரங்கள் அமைப்பினால் பிளாஸ்ரிக் இருக்கைகள்(ஸ்றூல்) அமைப்பின் ஆலோசகர் ஜவ்பர் ஹசனால் வழங்கப் பட்டது. இந்நிகழ்வில் வைத்தியசாலை பிரதம தாதி உத்தியோகத்தர் ரஞ்சித் ஜேசுதாஸ், அமைப்பாளர் ஏ.எஸ்.ஜவாஹிர் மற்றும் தாதியர்கள் கலந்து கொண்டனர். (கந்தளாய் செய்தியாளர்)



சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயத்தில் ஒரு வேலைத்தளத்தில் ஒன்றாக வேலை செய்பவர்களிடையே பரஸ்பரம், ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்ற பெருநாள் குதூகலம் பாடசாலையின் நலன்புரி குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுடன் மாளிகைக்காடு கமு/கமு/அல்- ஹுசைன் வித்தியாலய அதிபர் ஏ.எல்.எம்.ஏ.நழீர் மற்றும் சபீனா முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஐ.அஸ்மி ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)





அட்டாளைச்சேனை நிலாமியா கனிஷ்ட பாடசாலையின் 2023ஆம் ஆண்டுக்கான முதலாம் ஆண்டு வித்தியாரம்ப விழா வெள்ளிக்கிழமை(28) பாடசாலை அதிபர் எம்.எப்.எம்.நளீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிதியாக கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்-ஷெய்க் ஏ.எல்.அஸ்ரப் (ஷர்க்கி) ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எம்.வாஹித், எம்.ஏ.அஸ்வர், பாடசாலை இணைப்பாளர் எம்.எல்.ஜாவிர், பள்ளிவாசல் தலைவர் ஏ.எம். இமானுதீன் உட்பட பல துறைசார்ந்தோரும் கலந்து கொண்டனர். (கோணாவத்தை, திராய்க்கேணி செய்தியாளர்கள்)





பாலமுனை தாருல் ஹசனத் வித்தியாலயத்தில் 2023ஆம் ஆண்டுக்கான வித்தியாரம்ப விழா பாடசாலை அதிபர் எம்.ஏ. அபாஹுல்பான் தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில்(25) இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக எம்.எம். சித்தி பாத்திமா அனஸ் (SLEAS) கல்வி துணை இயக்குனர் கல்வி அலுவலகம் மற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்களும் கலந்து சிறப்பித்தனர். (திராய்க்கேணி செய்தியாளர்)

# நோன்புப் பெருநாளை முன்னிட்டு கலாசார விளையாட்டுப் போட்டி







(கல்குடா செய்தியாளர்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவு நோன்புப் பெருநாளை முன்னிட்டு நடத்திய கிராமிய கலாசார விளையாட்டு விழா சனிக்கிழமை(29) பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எஸ்.ஏ.பஷீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எஸ்.எச்.முசம்மில் கலந்து கொண்டதுடன் வாழைச்சேனை பொலிஸ் நிலைய அதிகாரிகள், பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயத் தலைவர்கள், கோறளைப்பற்று மத்தி சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எல்.ஏ.மஜீத், வங்கி முகாமையாளர் எஸ்.ரவிச்சந்திரன், வங்கி கட்டுப்பாட்டுச்சபை தலைவர் ஏ.பி.ஏ.காதர், ஆர்.சி.பி.ஓ. தலைவர் எச்.எம்.பைறூஸ் மகாசங்க தலைவர் அஸீஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுகளான தேங்காய் திருவுதல், பனிஸ் சாப்பிடல், யானைக்கு கண்வைத்தல், கயிறு இழுத்தல் உட்பட கலாசார போட்டிகள் இடம்பெற்றதுடன் அதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் கலந்து கொண்ட அதிதிகளினால் வழங்கப்பட்டன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# இலவச மரக்கறி பொதிகள் விநியோகம்

(பொலிவேரியன் செய்தியாளர்)



சாய்ந்தமருது சந்தைக்கு முன்பாக தொழிலதிபர் அமீனினால் இலவசமாக மரக்கறி பொதிகள் அண்மையில் பொதுமக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இன, மத, மொழி கடந்து சாய்ந்தமருது மற்றும் இதர பிரதேசங்களில் இருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் மரக்கறி பொதிகளை வாங்கிச் சென்றமை காணக்கூடியதாக இருந்தது.

இது பெருநாள் காலம் என்பதால் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, சகலரும் சமைத்துண்டு பெருநாள் காலத்தை சந்தோஷமாகக் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மரக்கறி பொதிகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

தனி மனிதராக இருந்து கொண்டு காலாகாலமாக இவ்வாறான மனிதாபிமானமிக்க செயற்பாட்டை பொதுமக்களின் நிலை அறிந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்துவரும் பெருமனங் கொண்ட தொழிலதிபர் அமீனுக்கு சாய்ந்தமருது மக்கள் தமது நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்.



கந்தளாய் தி/பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த (சா/த) மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு பழைய மாணவ சங்கம் அதிபரின் கோரிக்கைக்கமைவாக விசேட செயலமர்வு, கருத்தரங்குகள் மற்றும் பகுதிநேர வகுப்புகளை நடத்தி வருகின்றது. இதனடிப்படையில் கணிதப் பாட கருத்தரங்குக்கான நிதியினை பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து பாடசாலை அதிபரிடம் கையளித்தனர். (கந்தளாய் செய்தியாளர்)

## பல்கலைக்கழக மாணவி திடீர் மரணம்

### பெரியகல்லாறில் சம்பவம்

(மண்டூர் செய்தியாளர்)

களுவாஞ்சிக்குடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாற்றில் பல்கலைக்கழக மாணவி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை(29) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உதயபுரம் பெரியகல்லாறு-02 சேர்ந்த 23வயதுடைய ஆனந்தன் டென்சிகா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவார். குறித்த மாணவி கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் நிலையில் கடந்த இரு வாரங்களாக தனது வீட்டில் விடுமுறையிலிருந்து வருவதாகவும் சம்பவ தினத்தன்று கடை ஒன்றுக்கு சென்று தனது தாயாருடன் பழங்கள் வாங்கி வந்து உண்ட பின்னர் தனது படுக்கையறையில் நித்திரை செய்து கொண்டிருந்தபோது மயக்கமுற்று இருந்ததனை அவதானித்த குடும்பத்தினர் கல்லாறு வைத்தியசாலையில் அனுமதித்து மேலதிக சிகிச்சைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமார் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்ததுடன் விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவு நோன்புப் பெருநாளை முன்னிட்டு நடத்திய கிராமிய கலாசார விளையாட்டு விழா வெள்ளிக்கிழமை(28) காகிதநகர் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி எம்.ஏ.ஆரிபா கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் கலந்து கொண்டார். (கல்குடா செய்தியாளர்)





ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் வைபவம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(28) நடைபெற்றது. இதன்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அஸாத் எம்.ஹனீபா மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ்.பதிரகேவினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)



சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் (GMMS) தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா அண்மையில் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். அல்-அமீன் றிசாட் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, பாடசாலையின் பழைய மாணவரும் அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளருமான எம்.ஐ.எம்.ரியாஸ், ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ. சஹரூன் மற்றும் சாய்ந்தமருது மக்கள் வங்கியின் உப முகாமையாளர் ஏ.ஆர்.றிஸ்வான் முஹம்மட் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். (பொலிவேரியன் செய்தியாளர்)



அட்டாளைச்சேனை கல்விக் கோட்டமட்ட 16 வயதுப் பிரிவுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அட்டாளைச்சேனை அல் -அர்ஹம் வித்தியாலய மைதானத்தில் வியாழக்கிழமை(27) நடைபெற்றது. இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய அணி சம்பியனாகி அக்கரைப்பற்று வலய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதிபர் எம்.ஏ.அன்சார் உட்பட வீரர்களைப் படத்தில் காணலாம். (அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

# குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகும் யானைகளால் உடைமைகளுக்கு சேதம்

## வனபரிபாலனத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்தும் பராமுகமாக செயற்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டு





(பாறுக் ஷிஹான்)

யானைகள் திடீரென ஊருக்குள் உட்புகுந்து மக்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கின்ற சம்பவங்கள் அண்மைக்காலமாக பதிவாகியுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை பகுதிகளில் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் கடந்த சில தினங்களாக திடீரென யானைகள் உட்புகுந்து அட்டகாசம் செய்வதுடன், பொதுமக்களின் சொத்துகளுக்கும் சேதம் விளைவித்துள்ளன.

மேற்குறித்த பகுதிகளில் இவ்வாறு யானைகள் ஒன்றன் பின் ஒன்றாக திடீரென உட்புகுந்து மதில்கள், கட்டிடங்களை உடைத்து சேதம் விளைவித்து வருகின்ற அதேவேளை, வேளாண்மை செய்கைக்காக விதைப்பதற்கு வைத்திருந்த முளைநெற்களையும் சேதப்படுத்தியுள்ளன. இதனால் பிரதேச மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த யானைகள் அங்குள்ள பொதுமக்களின் வீட்டுத் தோட்டம் என்பவற்றையும் பிடுங்கி சேதமாக்கி செல்வதாகவும் இவை தொடர்பில் பொலிஸார் மற்றும் வனபரிபாலனத் திணைக்களத்துக்கும் பொதுமக்கள் அறிவித்துள்ள நிலையில், இது தொடர்பில் தீர்வு பெற்றுத்தருமாறு கேட்கின்றனர்.

மேலும், அண்மைக்காலமாக தினந்தோறும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுவதனால் யானைக்கூட்டத்தைக் கட்டுப்படுத்தி காட்டுக்குள் விரட்டுவதற்கு அவ்விடத்துக்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வருகை தருவதில்லை என்கின்ற குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் நினைவுதினம்



(வெல்லாவெளி செய்தியாளர்)

'தராக்கி' என்று உலகளவில் பேசப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் 18ஆம் ஆண்டு நினைவுதினம், மட்டக்களப்பிலுள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் சனிக்கிழமை (29) அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு மாவட்ட தொழில்சார் ஊடக சங்கம் என்பன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்திருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டார்கள்.

இதன்போது படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து, ஈகைச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டு இருநிமிட மௌன இறைவணக்கத்துடன் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்துக்கு எதிரான ஊடக அறிக்கையொன்றும் தலைவரால் வாசிக்கப்பட்டது.

# சிங்கத்துக்கு புலி வேஷம் கொடுத்து மக்களை ஏமாற்ற வேண்டாம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்




(கனகராசா சரவணன், கல்லடி செய்தியாளர்)

தமிழ்த் தேசியத்துக்காக போராடுகின்ற தமிழ்த் தேசியவாதிகள் மீது கரிசனை கொள்ளாது மாறாக போலி தேசியம் பேசுகின்ற சிங்கத்தைப் பார்த்து புலி என தெரிவித்த அமைச்சருக்கு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் வரலாறு தெரியாது. எனவே, அவரின் வரலாற்றை அறிந்துவிட்டு கூறியிருக்க வேண்டும். மாறாக, சிங்கத்துக்கு எல்லாம் புலி வேஷம் கொடுத்து மக்களை ஏமாற்ற வேண்டாம் என்பதுடன், அமைச்சரின் கூற்றை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி காரியாலயத்தில் சனிக்கிழமை (29) இடம்பெற்ற படுகொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளரின் 18ஆவது நினைவு தின அஞ்சலி செலுத்தும் நினைவேந்தலில் கலந்துகொண்ட தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்தளவில் 75 வருடங்களுக்கும் மேலாக சிங்கள, தமிழ் மக்களிடையே ஒரு முரண்பாடு காணப்படுகின்றது.

அந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்ற கொடூரமான இனவழிப்பு தொடர்பாக அன்றைய காலகட்டத்தில் மாமனிதர் சிவராம் உண்மையை உலகத்துக்கு ஊடகத்துறையால் தெரியப்படுத்தி ஆற்றிய பணி மிக முக்கியமானது.

இவ்வாறு உண்மையை வெளிப்படுத்தி வந்த தென் தமிழீழத்தில் அம்பாறை மாவட்டத்தில் முதன்முதலாக ஊடகவியலாளர் க.தேவராசா கொண்டை வெட்டுவான் இராணுவ முகாமில் 1985.12.25ஆம் திகதி சுட்டு படுகொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து நடந்த உண்மைச் சம்பவங்களை எழுத்துமூலம் உலகத்துக்கு தெரியப்படுத்தியதன் வாயிலாக கிழக்கு மாகாணத்தில் நடேசன், த.சிவராம், சுகிர்தராஜன், இரட்ணசிங்கம் உட்பட 46 ஊடகவியலாளர்களுக்கு கிடைத்த தண்டனை, மரணதண்டனை. இந்த மரணத்துக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை.

சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்ற ஜனநாயகம் இந்த நாட்டில் நடைபெற்றி ருந்தால் இவ்வாறானவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள்.

எனவே, எந்த சவால் வந்தாலும் நாங்கள் தொடர்ந்து தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் என்ன நோக்கத்துக்காக மக்கள் போராளிகளின் மற்றும் ஊடகவியலாளர்களது தியாகங்கள் நடைபெற்றதோ அந்த தியாகங்களுக்காக ஓர் அணியாக எங்கள் தேசம் அங்கீகரிக்கப்படும் வரை மக்களுடன் இணைந்து பயணிப்போமென மாமனிதர் சிவராமின் நினைவேந்தலில் இந்த உறுதிமொழியை மக்களுக்கு வழங்குகின்றேன் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



***அடிக்கடி மகிந்தட ஊட்ட சீனத்தூதுவர் வந்து போறதாக ஒரு செய்திய பார்த்தன். என்ன குரங்கு விஷனசுக்கு பொருத்தமான ஆளு மகிந்த கொம்பனிதான் எண்ட கண்டுத்தாரோ..? இல்ல சீனாவ புடிச்சாத்தான் இந்தியாவ இலங்கயில தலை போடாம பாக்கலாம் எண்டு மகிந்தட ஆக்கள் கணக்கு போட்டுத்தாங்ளோ.. ஏதோ ஒண்டு இருக்கு சோதயன் குடும்பி சும்மா ஆடாது எலுவா.?***

# தமிழரசுக் கட்சியின் மே தினம் களுவன்கேணியில்

உழைப்பாளர் தினம் இன்று மே முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சி ஏற்பாடுசெய்துள்ள கிழக்கு மாகாண மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய நிகழ்வு மட்டக்களப்பு வந்தாறுமூலை களுவன்கேணியில் பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பெருந்திரளானவர்கள் கலந்துகொண்டு உழைப்பாளர்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதுடன், கவிதை யரங்கு, கதிரவன் பட்டிமன்றம், தொழில்சார் சங்கங்களின் பிரதிநிதிகளின் உரைகள் அடங்கலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இலங்கை தமிழரசுக் கட்சியால் வடமாகாணம் சார்ந்த மே தினம் கிளிநொச்சியிலும் கிழக்கு மாகாணம் சார்ந்த மே தினம் மட்டக்களப்பு களுவன்கேணியிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் அறிவுறுத்தலுக்கமைய மாநகரை தூய்மைப்படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் முதல் கட்டமாக கல்முனை பொது மயானம் சனிக்கிழமை (29) சிரமதானம் செய்யப்பட்டது. கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் தலைமையில் மேற்பார்வை உத்தியோகத்தர்களான ஏ.எம்.அதுகம், எஸ்.விக்கினேஸ்வரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இந்த சிரமதானப்பணி கல்முனை மாநகர சபை ஊழியர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. நகரை தூய்மைப்படுத்தும் மாநகர ஆணையாளரின் திட்டத்தில் முதல் நிகழ்வாக மயானத்தை தெரிவுசெய்தமைக்கு பிரதேசவாசிகள் பாராட்டுத் தெரிவித்தனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)**

# ஹெரோயினுடன் இருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின்படி, உப பொலிஸ் பரிசோதகர் சமாணந்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று நபர்களை கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்த ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரிடமிருந்து 40 மில்லிகிராம் ஹெரோயினும் மற்றைய நபரிடமிருந்து 40 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வெள்ளிக்கிழமை (28) ஆஜர்படுத்தியபோது மே 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்க பெரும் பங்கை வகிக்கும் ஐ.எம்.எவ்.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

(எஸ்.அஷ்ரப்கான், மாளிகைக்காடு செய்தியாளர்)

பொருளியல் நிபுணர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் என்ற அடிப்படையில் நடைமுறை பிரச்சினைகளுக்கு ஆய்வுகளை மேற்கொண்டு அதனூடாக நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக்கவேண்டும். மேலும் இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு வெளிநாட்டு நாணய நிதியத்தின் உதவியானது பெரும் பங்கை வகிக்கின்றது - என தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியலாளர்கள் மன்றத்தின் 45ஆவது கூட்டம் தொழில்நுட்பப் பீடத்தில் வெள்ளிக்கிழமை (28) பல்கலைக்கழக பொருளியலாளர்கள் மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில் இடம்பெற்றபோது பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

இலங்கையில் தற்காலத்தில் நிலவுகின்ற பொருளாதாரப் பிரச்சினை காரணமாக நமது நாடு பல்வேறுபட்ட பிரச்சினைகளை அனுபவித்து வருகிறது. விசேடமாக பெற்றோலிய இறக்குமதி தடை காரணமாக மின்வெட்டு. இதனூடாக பொதுமக்களுக்கான சேவைகள், கைத்தொழில்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.



மேலும், இலங்கையில் 2.4 மில்லியன் மக்கள் உதவிகளை எதிர்பார்த்தவண்ணம் வாழ்ந்து வருகின்றனர். அதிலும் 1.7 மில்லியன் மக்கள் மிகவும் கஷ்டத்தில் வாழ்கின்றார்கள். அதில் குழந்தைகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோர் காணப்படுகின்றனர்.

இதன் காரணமாக நாடு பாரிய இன்னல்களை எதிர்நோக்கி வருகிறது. இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து தீர்வு காண்பதற்காக இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) நிதியை பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை செய்து வெற்றியடைந்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெறுவதுடன், நாடு முன்னோக்கி நகர்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு வெளிநாட்டு நாணய நிதியத்தின் உதவியானது பெரும் பங்கை வகிக்கின்றது - என்றார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை கலை, கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் நிகழ்த்தினார். நன்றியுரையை பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.ஏ.எம்.நுபைல் வழங்கினார்.

இந்நிகழ்வில் இலங்கைப் பல்கலைக்கழக பொருளியலாளர்கள் மன்றத்தின் ஸ்தாபகர் பேராசிரியர் குணரூபன், இலங்கை பல்கலைக் கழகங்களின் பொருளியல்துறை நிபுணர்கள், தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், நூலகர், துறைத்தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், போதனைசாரா ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் டெங்குநோயின் தாக்கம் அதிகரிப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் தற்போது வரையில் 850 நோயாளிகள் இனங்காணப்பட்டு, சிகிச்சைபெற்று வருகின்றனர். அதில் செங்கலடியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் சனிக்கிழமை (29) முன்னெடுக்கப்பட்ட டெங்கு பரிசோதனையின்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மாவட்டத்தின் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. இப்பிரிவில் 107 பேர் டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். அதிலும் கொக்குவில் பிரதேசத்தில் ஒரே வீட்டில் நான்கு நோயாளிகள் வரை இனங்காணப்பட்டுள்ளனர்.

வெட்டுக்காடு, இருதயபுரம் ஆகிய கிராமங்களிலும் மட்டக்களப்பு நகர வைத்திய சுகாதாரப் பிரிவில் 35 வீதமானவர்களும் இப்பிரதேசத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் விசேட அதிரடி டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது கொக்குவில் பிரதேசத்தில் பொதுமக்களின் வீடுகள், கிணறுகள், சுற்றுப்புறச் சூழல்கள் என்பன பரிசோதிக்கப்பட்டு உரிய சுகாதார முறையில் வீடுகளை சுத்தமாக வைத்திருக்க தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்விசேட பரிசோதனையின்போது மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.வாசுதேவன் உட்பட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் இவ்விசேட டெங்கு பரிசோதனையில் கலந்துகொண்டிருந்தனர்.

# கல்முனை வடக்கு சுகாதாரப் பிரிவில் டெங்கு விழிப்புணர்வு

(பாண்டிருப்பு செய்தியாளர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் டெங்கு நுளம்பு பெருக்கம் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ரமேஸின் வழிகாட்டலில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணிக் குழுவினர் இணைந்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பில் வீடு வீடாகச் சென்று பரிசோதனை செய்து மக்களை விழிப்பூட்டும் மற்றும் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றுப்புறத்தை அசுத்தமாக வைத்திருந்தோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இடையிடையே கடும் மழை பெய்துவருகின்றது. இதனையடுத்து டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மே 06 மன்னரின் முடிசூட்டு விழா: லண்டன் கொண்டுவரப்பட்டது புனித கல்



பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவுக்காக, ஸ்கொட்லாந்திலிருந்து வரலாற்று சிறப்புமிக்க புனித ஸ்கொட்டிஷ் கல் லண்டனுக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

'விதியின் கல்' என அழைக்கப்படும் இந்த கல் பண்டைய ஸ்கொட்லாந்தின் இறையாண்மையின் சின்னமாக பார்க்கப்படுகிறது. 152 கிலோ எடையுள்ள இந்தக் கல், 1296ஆம் ஆண்டு அப்போதைய மன்னராக இருந்த முதலாம் எட்வர்ட் ஸ்கொட்லாந்திடமிருந்து கைப்பற்றினார்.

எதிர்வரும் 6ஆம் திகதி வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் மன்னர் மூன்றாம் சார்லஸின் முடிசூட்டு விழா நடைபெறவுள்ளதால், எடின்பெர்க் கோட்டையில் வைக்கப்பட்டிருந்த இந்தக் கல், கடந்த 27 ஆண்டுகளில் முதன்முறையாக அங்கிருந்து லண்டனுக்கு பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்படுகிறது. மன்னர் முடிசூட்டு விழாவுக்கு பின்னர் மீண்டும் ஸ்கொட்லாந்து கோட்டைக்கே கல் திரும்ப எடுத்துவரப்படும்.

# துரத்தும் போர்; துயரத்தில் சூடான் வாழ் சிரிய மக்கள்!

உலக செய்திகள்





சூடான் உள்நாட்டுப் போர் மூன்றாவது வாரத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், சிரியா உள்நாட்டுப் போரிலிருந்து தப்பிப் பிழைக்கலாம் என்ற நம்பிக்கையில் சூடான் வந்த 30,000இற்கும் மேற்பட்டோர் இப்போது செய்வதறியாது திகைத்து வருகின்றனர். வான்வழித் தாக்குதல்கள், ஏவுகணைகள், துப்பாக்கிகள் என துயர்மிகு சூழலிலிருந்து மீண்டுவிட்டதாக நினைத்தவர்களை இப்போது மீண்டும் வேறொரு மண்ணில் அதே சத்தங்கள் துரத்துகின்றன.

சூடானில் இராணுவம் மற்றும் துணை இராணுவத்துக்கு இடையே ஏற்பட்டுள்ள ஆட்சி அதிகார மோதல் தற்போது உள்நாட்டு போராக மாறியுள்ளது. இதன் காரணமாக சூடானில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இதேவேளை, இருதரப்பு மோதலில் 512 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 4,000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், சூடானில் சிக்கியுள்ள தங்கள் நாட்டு மக்களை மீட்க சம்பந்தப்பட்ட நாட்டின் தலைவர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சூடானில் வெளிநாட்டு தூதரகங்களில் பணியாற்றும் ஊழியர்களை வீதி, விமானம் மற்றும் கடல் மார்க்கமாக பத்திரமாக வெளியேற்றும் நடவடிக்கையில் அந்தந்த நாடுகள் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, நோன்புப் பெருநாளை முன்னிட்டு முதலில் தற்காலிகமாக 72 மணி நேர போர் நிறுத்தத்துக்கு இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர். இந்நிலையில், சூடானில் சிக்கியிருந்த வெளிநாட்டினர் அங்கிருந்து வெளியேற இதுவொரு வாய்ப்பாக இருந்தது. கடந்த 24ஆம் திகதி அமுல்படுத்தப்பட்ட போர்நிறுத்தம் நிறைவடைந்த நிலையில் மேலும் 72 மணிநேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து வெளிநாட்டவர் பலரும் தத்தம் நாடுகளுக்கு புறப்பட்டுவிட்டனர். ஆனால், சூடானில் உள்ள 30 ஆயிரத்துக்கும் அதிகமான சிரிய மக்களுக்கு சொந்த நாடு திரும்புவது என்பது ஒரு தெரிவாக இல்லவே இல்லை.

சிரியாவின் ரக்கா நகரிலிருந்து சூடானுக்கு புலம்பெயர்ந்துவந்த 30 வயதான சலே இஸ்மாயில் கூறுகையில், "தலைநகர் கார்ட்டூமில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. ஆனாலும், நாங்கள் நாடு திரும்புவது ஒரு தெரிவாக இல்லை" - என்றார்.

அல் பர்தான் என்ற சிரிய இளைஞர் தெரிவிக்கையில், "நாங்கள் வசிக்கும் பகுதிக்கு வந்த போராட்டக்காரர்கள், எங்களிடமிருந்து சிறியளவிலான பணத்தை, பொருட்களை பறித்துச் சென்றனர். எனது நண்பரின் குடும்பம் கார்ட்டூமிலிருந்து புறப்பட முயன்றபோது துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டனர். அவர்களின் நிலை என்னவானது என்று தெரியவில்லை" - என்றார்.

சொந்த மண்ணில் உள்நாட்டுப் போர் துரத்த வேரிடத்தில் தஞ்சம் புகுந்தோம். இப்போது தஞ்சமடைந்த நாட்டிலும் உள்நாட்டுப் போர். அதனால் எங்கே செல்வதென்று தெரியவில்லை என்று சூடான் வாழ் சிரிய மக்கள் பலரும் புலம்புகின்றனர்.

"போரைப் போல் இந்த உலகில் எதுவுமே மோசமானது இல்லை. போர் எவ்வளவு மோசமானது என்பதை அதை நடத்துபவர்கள் உணரும்போது அது தடுக்க முடியாதளவுக்கு கைமீறிச் சென்றிருக்கும்" என்று எழுத்தாளர் எர்னஸ்ட் ஹெமிங்வே தனது 'ஃபேர்வல் டூ ஆர்ம்ஸ்' புத்தகத்தில் தெரிவித்திருப்பார். அதைத்தான் இந்த வேதனை சாட்சிகள் நினைவுபடுத்துகின்றன.

**அடுத்தது எங்கே?**

இந்நிலையில், சூடான் வாழ் சிரிய மக்கள் பலரும் திரண்டு எகிப்து நோக்கி தங்களின் பயணத்தைத் தொடங்கியுள்ளனர். கார்ட்டூமை தாண்டிவிட்டால் உயிர் பிழைக்கலாம். அதன்பின்னர் எப்படியும் ஒரு வாழ்க்கை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் எகிப்து நோக்கி பயணிக்கின்றனர். வாடி ஹல்பா பகுதி சூடான்- எகிப்து எல்லையிலுள்ளது. ஆனால், எகிப்து எல்லைக்குள் இன்னும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

எங்களுக்கு இப்போதைக்கு வேறு வழியில்லை. எகிப்து செல்வதுதான் முதல் வழி. ஆனால், ஏற்கெனவே எகிப்து எல்லை அருகே உள்ள வாடி ஹல்பாவுக்கு சென்றுவிட்ட எனது நண்பர்கள் பலரும் என்னைத் தொடர்பு கொண்டு உடனே புறப்பட வேண்டாம். பாலைவனப் பகுதியில் தண்ணீர் கூட கிடைக்காமல் துவண்டு கொண்டிருக்கிறோம். எகிப்து எல்லைக்குள் இன்னும் நாங்கள் அனுமதிக்கப்படவில்லை என்றனர். அதனால் இங்கே காதைப் பிளக்கும் துப்பாக்கிச் சத்தங்களுக்கும் இடையே வீட்டினுள் அடைபட்டுக் கிடக்கிறேன்.

சிரியா செல்ல வேண்டும் என்று தோன்றவே இல்லை. நான் இரண்டு ஆண்டுகள் சிரிய அரசால் சிறைவைக்கப்பட்டிருந்தேன். ஐ.எஸ்.ஐ.எல். குழுவினரால் சொல்ல இயலாத துன்பங்களுக்கு ஆளானேன். அதனால் சிரியா செல்ல விரும்பவில்லை. எனக்கும் என் குடும்பத்தாருக்கும் இங்கே என்ன ஆனாலும் சிரியா திரும்புவதாக இல்லை. சிரிய ஜனாதிபதி அல்-பஷார் அல் அஸாத் ஆட்சி நடக்கும்வரை அங்கே செல்வதாக இல்லை" - என்றார்.

***"அது தற்கொலைக்கு சமமாகும்"***

கடந்த சில ஆண்டுகளாக கார்ட்டூமில் வசித்து வருகிறார். அவருடன் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளும் வசித்து வருகின்றனர். ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போர் அவரை கார்ட்டூமிலிருந்து துரத்தியுள்ளது. இதனால் அபு முகமது குடும்பத்துடன் சூடான் துறைமுகத்திற்கு வந்துவிட்டார்.

"வழிநெடுக உயிருக்கு உத்தரவாதம் இல்லாத பயணத்தை மேற்கொண்டோம். ஆங்காங்கே வழிப்பறிச் சம்பவங்களுக்கு குறைவில்லை. சூடான் துறைமுகத்துக்கு வந்து பார்த்தபோது அங்கே எல்லா நாட்டைச் சேர்ந்தவர்களும் தாயகம் திரும்பக் காத்திருந்தனர். எங்களுக்கு அங்கிருந்து சவூதி அரேபியா செல்லும் வாய்ப்பு இருந்தது. ஆனால் நாங்கள் சவூதி சென்றால் அங்கிருந்து எங்களை எல்லா உபசாரங்களோடும் மீண்டும் சிரியாவுக்கே அனுப்பிவிடுவார்கள். அது தற்கொலைக்கு சமம். அதனால் என்ன செய்வதென்று தெரியாமல் வீதிகளிலேயே தஞ்சம் புகுந்துள்ளோம்" - என்றார்.

# உலகில் விலையுயர்ந்த நீர்; ஒரு லீற்றர் ஒன்றேகால் கோடி



24 கெரட் தங்கத் துகள்கள் கலந்துள்ள, உலகில் விலையுயர்ந்த தண்ணீர் போத்தலொன்றின் விலை 45 இலட்சம் ரூபாவாகும் (இந்திய ரூபா).

2010ஆம் ஆண்டில் கின்னஸ் புத்தகத்தில் உலகிலேயே விலை உயர்ந்த தண்ணீர் என 'அக்வா டி கிறிஸ்டல்லோ ட்ரிபுடோ எ மோடிக்லியானி' பதிவு செய்யப்பட்டது.

பிரான்ஸின் ஒரு நன்னீர் ஊற்றில் இருந்தும், பிஜியின் ஒரு நீரூற்றிலிருந்தும், ஐஸ்லாந்தின் பனிக்கட்டி ஆற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீர் ஆகிய மூன்றும் கலக்கப்பட்டு இந்த தண்ணீர் விற்பனை செய்யப்படுகிறது. 24 கெரட் தங்கத்தில் 750 மில்லிலீற்றர் தண்ணீர் பெக்கேஜ் செய்யப்படுகிறது. ஒரு லீற்றர் தங்க தண்ணீரின் விலை இந்திய ரூபாபடி 45 இலட்சம் என தெரிவிக்கப்படுகின்ற நிலையில், தற்போதைய நிலையில் இலங்கையிலிருக்கும் ஒருவர் ஒரு தங்க தண்ணீர் போத்தலை வாங்குவதாயின் சுமார் ஒருகோடியே 75 இலட்சம் ரூபா செலவிடவேண்டிவரும் (17406639.91 ரூபா) மேலும் 5 கிராம் சுத்த தங்கமும் தண்ணீரில் கலந்திருக்கிறது. இதனால் தண்ணீர் அதிக காரத்தன்மையுடனும் ஆரோக்கியமாகவும் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

# போட்டியின் நடுவே ரசிகர்களுக்கிடையில் அடிதடி



டில்லி அருண் ஜெட்லி மைதானத்தில் டில்லி கேபிடல்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியின் போது ரசிகர்களுக்கிடையில் அடிதடி சண்டை ஏற்பட்டது. இதன் காரணமாக இருக்கைகள் சேதமடைந்தன.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 197 ரன்களை குவித்தது. பதிலுக்கு ஆடிய டில்லி அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 188 ரன்கள் மட்டுமே எடுத்து 9 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. இந்தப் போட்டி நடந்து கொண்டிருந்தபோது மைதானத்தில் அமர்ந்திருந்த ரசிகர்களுக்கிடையில் அடிதடி சண்டை ஏற்பட்டது. இதில் ஸ்டேடியத்திலிருந்த இருக்கைகள் சேதமடைந்தன.

# சம்பியன் கிண்ணத்தை வென்ற பாரூக் ஜெம்ஸ் அணி







***(பேருவளை நிருபர்)***

நோன்புப் பெருநாளை முன்னிட்டு காலி பிரிமியர் லீக் 2023 மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி தடல்ல அல் முபாரக் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் தடல்ல பிரிமியர் லீக் ஏற்பாட்டில் கடந்த வாரம் நடைபெற்றது. பிரதேசத்திலுள்ள 14 கிரிக்கெட் அணிகள் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றின.

இறுதிப் போட்டி பாரூக் ஜெம்ஸ் அணிக்கும் இபா ஜெம்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் பாரூக் ஜெம்ஸ் அணி 10 ஓட்டங்களால் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்த அணி ஐந்து ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 73 ஓட்டங்களைப் பெற்றதோடு, இபா ஜெம்ஸ் அணி ஐந்து ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பாரூக் ஜெம்ஸ் அணியைச் சேர்ந்த எம்.இஸட்.எம்.ஸப்வான் தொடர் ஆட்டநாயகனாகவும், இபா ஜெம்ஸ் அணியைச் சேர்ந்த எம்.ஆர்.எம்.முன்ஸிர் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், இபா ஜெம்ஸ் அணியைச் சேர்ந்த முஹம்மது நஸ்ஹான் சிறந்த பந்துவீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 100ஆவது டெஸ்ட் வெற்றியை சுவைத்த இலங்கை

சுற்றுலா அயர்லாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 10 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை அணி, டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 311ஆவது போட்டியில் 100ஆவது வெற்றியை பதிவுசெய்தது.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் வெள்ளிக்கிழமை நிறைவடைந்த இரண்டாவது போட்டியில் இலங்கை அணி வெற்றியீட்டியதை தொடர்ந்து டெஸ்ட் தொடரையும் 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பிரபாத் ஜயசூரிய தெரிவுசெய்யப்பட்டதுடன், தொடர் ஆட்டநாயகனாக குசல் மெண்டிஸ் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

100வது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற எங்கள் சிங்கங்களுக்கு வாழ்த்துகள்.

Dialog

# ஷமானின் அபார ஆட்டத்துடன் பாகிஸ்தானுக்கு மீண்டும் வெற்றி



நியூசிலாந்து அணியுடனான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 48.2 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 337 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

5 போட்டிகள் கொண்ட தொடரில் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றிருந்த நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 336 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து 337 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பகர் ஷமான் கடந்த ஆட்டத்தைப் போலவே சிறப்பாக ஆடி சதமடித்தார். அவர் இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்து 180 ரன்களை குவித்தார். இறுதியில், பாகிஸ்தான் அணி 48.2 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 337 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரில் 2-0 என பாகிஸ்தான் முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது போட்டி நாளை மறுதினம் கராச்சியில் நடைபெறுகிறது.

# நடுவர்களிடம் சிக்கிய மோசடியாளர்கள்




பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற போட்டியில் நியூஸிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் ஓவர் முடிந்ததும் வழக்கத்துக்கு மாறாக மைதானத்தில் ஏதோ ஒன்று வித்தியாசமாக இருப்பதாக உணர்ந்த நடுவர்கள் இருவரும் உடனடியாக போட்டியை நிறுத்தி விட்டு பேசினார்கள்.

குறிப்பாக பிட்ச்சை சுற்றியிருக்கும் 30 யார்ட் உள்வட்டத்தின் அளவு அதிகமாக இருப்பதாக உணர்ந்த அவர்கள் ஒருவருக்கொருவர் அதைப் பேசி உறுதி செய்தனர். அதைத் தொடர்ந்து சரியான தூரத்தை அளந்து உள்வட்டத்தை குறிக்கும் வட்ட வடிவிலான வெள்ளை துண்டுகளை 2 நடுவர்களும் பாகிஸ்தான் வீரர்களை வைத்தே சரியான இடத்தில் போட வைத்தனர்.

கிரிக்கெட்டில் காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப பவுண்டர்களின் எல்லை மாற்றப்பட்டாலும், 30 யார்ட் உள்வட்டம் மட்டும் இன்னும் மாறாமலேயே இருந்து வருகிறது. அதை பார்த்து ரசிகர்கள் ஆச்சரியமடைந்த நிலையில் இதற்கு முன் இப்படி ஒரு நிகழ்வை பார்த்ததில்லை என்று வியப்பை வெளிப்படுத்திய வர்னணையாளர்கள் இதை யார் செய்திருப்பார் என்று நேரலையில் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு மற்றொரு வர்னணையாளர் நிச்சயமாக நாம் இருவரும் செய்யவில்லை என்று கலகலப்பாக தெரிவித்தார். உள் வட்டத்தின் அளவை இப்படி பெரிதாக மாற்றினால் பவர் பிளே ஓவர்களில் நியூசிலாந்து பேட்ஸ்மேன்கள் அதிரடியாக பவுண்டரிகளை பறக்க விட முயற்சிக்கும் போது கேட்ச் கிடைப்பதற்கு அதிக வாய்ப்பு ஏற்படும். மைதான பராமரிப்பாளர்கள் ஆரம்பத்தில் தவறாக 30 யார்டை அளந்திருப்பார்கள் என்றும் பாகிஸ்தான் அணியினர் இதில் எந்த தலையிடும் செய்யவில்லை என்றும் அந்நாட்டு ரசிகர்கள் கூறுகின்றனர்.

TATA IPL
இன்றைய போட்டி
போட்டி இல - 43
பெங்களூர் எதிர் லக்னோ
நேரம் - இரவு 7.30
இடம் - லக்னோ

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7